போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4642

# திராவிடநாடு

ஆண்டு சந்தா ரூ. 7—0—0

மலர் 3 | 30 | 30—1—55 | இதழ் 30

[உள்ளப் போக்கு]

## "யார்மீது கோபித்துக்கொள்வது?"

வறுமை, எத்தகைய கோலத்தைத் தரமுடியும் என்பதை எடுத்துக் காட்டவே, அந்த மூதாட்டி விட்டுவைக்கப் பட்டிருக்கக்கூடும்! காலதேவன் எத்தனையோ வண்ண மலர்களை, அழகான அரும்புகளைக்கூட அழித்தொழித்துவிட்டு, இந்த 'எலும்புக்கூடு' உழல அனுமதிப்பதற்கு வேறு என்ன காரணம் இருக்கமுடியும்! வெறும் சருகு! அதற்குக் காலும் கையும், கண்ணும்! அம்மட்டோ! பாழும் வயிறும்!!

அந்தக் காய்ந்த வயிறுக்கு யாராவது 'புண்யவதி' புளித்த கஞ்சி தந்து விட்டால், பெரிய விருந்துதான்!! விருந்து, இரண்டு நாளைக்கு ஒரு தடவை கிடைக்கும் — புண்யவதியை அவள் புருஷன் கொடுமைப்படுத்தாதிருந்தால்!!

மற்றநாட்களில், தண்ணீர், காற்று!!

அதிகமாக ஏற்றுக்கொள்ளவும் கிழவிக்குச் சக்தி இல்லை—பட்டினியோடு நீண்டகாலமாகப் பழகிவிட்டதால்! கிழவியின் கண்களிலே, நீர் வருவது நின்று, நெடுநாட்களாகிவிட்டன!

இரண்டு, குழிகள்!-அவ்வளவுதான்! கண்களாகத்தான் அவை முன்பு இருந்தன!

மைகூட்த் தீட்டி அழகுபார்த்தது துண்டு — ஆனால் அது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு — 'அவர்' இருந்தபோது.

அவர் தந்த செல்வம் 'அக்கரை' சென்று ஆண்டு இருபதுக்கு மேலாகிவிட்டன — அரும்பு மீசைக்காரனாகச் சென்றான் — அன்னை அப்போது அழமுடிந்தது — இப்போது? அதற்கும் சக்தி வேண்டுமே, இல்லை!

துக்கம்—ஏக்கம்!

நிலைத்துவிட்ட திகைப்பு!

தரித்திரத்தின் கடைசிக் கட்டம்!!

இவைகளின் 'நடமாடும்' உருவம், அந்த மூதாட்டி. கிழவியைக் கண்டால், "ஐயோ பாவம்!" என்று பரிதாபம் பேசியகாலம் கூட மடிந்துபோய் விட்டது—எத்தனை நாளைக்குத்தான், பரிதாபச்சிந்து பாடியபடி இருக்க முடியும்!!

மலையின் கெம்பீரம்—மதியின் அழகொளி — மேகக் கூட்டத்தின் மோகனம்-இவைபற்றியே, பேசிக்கொண்டும், ரசித்துக்கொண்டும், சதா சர்வ காலமும் இருக்க முடிவதில்லையே, இந்தச் சஞ்சல மூட்டையைப்பற்றியா, சிந்தனையை எப்போதும் செலவிட்டபடி இருக்கமுடியும்!

'பாட்டியம்மா' 'பாட்டி' ஆகி, பிறகு 'கிழவி' யாகி, பிறகு 'ஏ! யாரது!' ஆகி, பிறகு 'போ! போ!' என்றாகி, பிறகு, 'இதேதடாதொல்லை' என்றாகி, 'பெரிய சனியன்' என்றாகி, 'பிசின், இலேசில் விடாது' என்றாகி இப்போது, கவனிப்பார், கவலைப்படுவாரற்ற ஓர் உருவமாகிவிட்ட நிலை!!

CNA

சுவரிலே இருக்கும் சித்திரத்தோடு யார் பேசுகிறார்கள்!

ஆனால், கிழவியோ, யார் கிடைத்தாலும் விடுவதில்லை!

பசி—பட்டினி—இதைக் கூறவா? அல்ல, அல்ல! யார் போவது......... அப்பா.........அடி அம்மா.........அல மேலா.......ஆண்டியப்பனா.........யாரடாப்பா......

நான்தான்......என்ன, என்ன...... வீட்டுக்குப்போ.........வள்ளி இருக்கா தண்ணிகொடுப்பா......

ஆண்டியப்பன் தானா...டே அப்பா! எனக்குத் தண்ணியும் வேணும் சோறும் வேணும், சொக்கி கூழ் கொடுத்தா; போதும்......ஒரு கடுதாசி எழுதிக்கொடுடா அப்பா......கோடித் தெரு கோபாலன், 'அக்கரை' போறானமே' அவனிடம் கொடுத்தனுப்பணும் ......வாடா அப்பா.........புண்யம்டா உனக்கு.........ஒரு நாலுவரி எழுதிக்கொடு.........

ஆண்டியப்பனுக்குக் கிழவி கூறப் போவது தெரியும் — அவன் சென்றுவிட்டான், வேகமாக — 'வேறே வேலை கிடையாது இந்தப் பைத்யத்துக்கு' என்று முணுமுணுத்தபடி.

எதிரிலேயும், பக்கவாட்டங்களிலும் தடவிப்பார்த்துப் பார்த்து, ஒரு உருவமும் கையில் தட்டுப்படாததால், கிழவிக்கு அவன் போய்விட்டான் என்பது தெரிந்தது. என்ன அவசரமான

வேலேயோ பாவம்!—என்ற எண்ணம் கிழவிக்கு—கோபமல்ல!

கோபம், குடிபுக, அந்த மூதாட்டியின் நெஞ்சிலே இடம் ஏது! சோகம் கப்பிக்கொண்டிருந்தது!!

'அக்கரை'யில் மூதாட்டியின் மணி!!

இங்கு இந்த எலும்புக் கூடு!!

இடையே, நாடு, காடு, மலே, வனம், வனந்திரம், கடல்!!

எண்ணம், விநாடியிலே எதையும் தாண்டும், எலும்புக்கூடு, எங்கே அந்தச் சக்தியைப் பெறுவது! புதை குழிக்குச் செல்லவே சக்தியில்லே!

யாராவது கிடைக்கமாட்டார்களா, என்று தேடித்தேடி அலுத்துப்போய், தன் குடிசையில் போய்ச்சுருண்டு விழுந்து விடுவது வாடிக்கை.

சொந்தக் குடிசைதான்!!

அது வேறு யாருக்கு வேண்டும்?—அதனுல் கிழவியிடமே, இருந்தது!

சரிந்துபோனசுவர்—பிய்ந்துபோன கூரை—அதன் நிலேமையும் கிழவியின் கோலமும் ஒரேவிதம்.

அக்கரையில், 'மணி'—'மார்க்' ஆகி; மாதாகோவில் தோட்டத்தில் வேலே செய்து ஒடிந்துபோய், பிறகு 'உல்லாச உலகுக்கு'க் கயவன் ஒருவனுல் இழுத்துச் செல்லப்பட்டு, கள்ளுறுகி, அடிபட்டு, உதைபட்டு, செத்தும் போய் விட்டான்.

மூதாட்டிக்கோ, 'மணி' மளிகைக் கடை வைத்திருக்கிருனே, மலர்த் தோட்டத்தில் வேலே பார்க்கிருனே, மாடுமனே மனேவியோடு சுகமாக இருக்கிருனே—எவ்விதம் இருக்கிருனே, என்று எண்ணம். நல்லவிதமாகத் தான் இருப்பான் என்ற எண்ணம்—நல்லவிதமாக இருக்கவேண்டும்என்று தானே தாய்உள்ளம் எண்ணமுடியும், அதனுல்!

பாவிப்பய, ஒரு காலணுக் கடுதாசி போடக்கூடாதா, என்று, எண்ணி எண்ணி கிழவி ஏக்கம் பிடித்தலேவது கண்டு, முதலில் பலர் சமாதானம் கூறிப்பார்த்தனர்—கார்டுவிலே முக்காலணு கூட ஆகிவிட்டது—'பாவிப் பய மகன்' காலணுக் கடுதாசி போட்ட பாடில்லே — சமாதானம் கூறுவதைக் கூட மற்றவர்கள் நிறுத்திக் கொண்டனர்—கிழவியோ, 'அக்கரை' போகிறவர்களிடமெல்லாம், கடுதாசி, கொடுத்தனுப்புவதை நிறுத்தவில்லே. சிரஞ்சீவி மணிக்கு......என்று துவங்கி முத்தம்மா என்று முடியும் அத்தக் கடிதம் ஒவ்வொன்றும், எவ்வளவு கன்னெஞ்சத்தையும் கரைத்துவிடும் — அவன் தான் கல்லறை சென்று விட்டானே—பலன் என்ன கிடைக்கும்!

ஓயாமல் கடிதங்கள்!

அந்தக் கிராமமும் அடிக்கடி, 'அக்கரை'க்கு, 'அரும்பு மீசைகளே' அனுப்பியபடி இருந்தது.

நஞ்சை இருந்தது—புஞ்சையும் உண்டு! கரும்பு பயிராகும், கால்வாய்ப் பாசனம் உண்டு–ஆனுல் அவ்வளவும், நாலேந்து பெரியபுள்ளிகளுக்குச்சொந்தம்—அவர்களோ நாடாளும் நாயகர்கள் வரிசையில் இருந்தவர்கள்—எனவே தலே நகரில் வசித்து வந்தனர்.

அரும்பு மீசைகள், அக்கரைசென்று ஐந்தாறு ஆண்டு பாடுபட்டால், ஆயிரம் ஐந்நூறுமீதம் பிடித்து, அரையோ காலோ ஏகர் வாங்கி, பிறகு ஏதோ கால்வயிற்றுக் கஞ்சிக்குக் குறைவில்லாமல் வாழலாம் என்று ஆசைப்பட்டுத்தான் சென்றனர்!

அவ்விதம் சென்றவர்களிலே ஒருவன் தான் மணி.

மணி, என்பது செல்லப் பெயர்—முழுப் பெயர் சிவசுப்பிரமணியம்!

'அவர்' இருந்தால்' ஆயிரம் ஆயிரமாகக் கொட்டிக் கொடுத்தாலும் உன்னே 'அக்கரை'க்கு அனுப்பமாட்டார்—என்று கூறிக்கதறி, பிறகு மணியின் நெற்றியிலே பிள்ளேயார் கோயில் ஐயர் கொடுத்த (ஒரு அணுவுக்கு!) விபூதியைத் தடவி, ஆயிரம் தெய்வங்களே வேண்டிக் கொண்டு, விடைகொடுத்தனுப்பினுள் கிழவி.

எப்போதாவது கொஞ்சம் 'போடும்' வழக்கம் உண்டு, மணிக்கு!

அக்கரை சென்றதும், அந்த ரகமானவர்களின் 'நேசம்' அதிகமாகி, 'போடுவது' வேகமாக வளர்ந்தது—அது அவனேப் படாதபாடு படுத்தி விட்டது—கல்லறை அவனே அழைத்துக்கொண்டது.

கிழவிக்குத் தன் 'மகன்' அக்கரையில் இருப்பதாகவே நினேப்பு!

'யாரிட்ட தீவினேயோ, என்னே அவன் மறந்துவிட்டான்' என்று எண்ணி வருந்தினுள்.

ஆயிரம் தெய்வங்களே மறுபடியும் மறுபடியும் வேண்டிக் கொண்டாள்—தெய்வங்களுக்கு, இதுதானு வேலே!—ஒரு திருவிழா முடிந்ததும் மற்ருேர் திருவிழாவுக்குத் தங்களேத் தயாராக்கிக்கொள்வதற்கே காலம் போதவில்லே—அக்கரை சென்றவன் மனதிலே புகுந்து, இந்த 'ஐயோபாவ'த்தின் மீது பாசம் ஏற்படச் செய்யவா நேரம் கிடைக்கும்! அதிலும் கடல் கடந்து செல்லவேண்டும்!

அந்தக் கிராமத்துக்கு பெரிய பட்டினங்களெல்லாம் பொருமைப்படக் கூடிய பெயர் இருந்தது—பொன்னூர்!

ஜல்லடை போட்டுச் சலித்தெடுத்தால் கூட ஒரு குண்டுமணி பொன்னும் கிடைக்காத பட்டிக்காடு!—அதாவது பிள்ளேயார் கோயில் சாமிவீடு தவிர! ஐயர் வீட்டிலே 'சோதனே' யிடத் துணிவு கொண்ட 'பாவிகள்' உண்டா! மற்ற இடங்களிலே குண்டுமணி அளவு தங்கம்கூடக் கிடையாது பெயர் மட்டும் பொன்னூர்!

பொன்னூருக்குப் பூர்வீகப் பெருமைகள் கூட உண்டு!

சீதாபிராட்டியாரை மயக்கிய மாய மான் ஓடிவந்தபோது கிளம்பிய 'தூசி' அங்கு படிந்ததால், பொன்மயமாகி விட்டதாம் அந்த ஊர்!

மாரிகோயில் திருவிழாவின்போது ஆடுவெட்டி ஆண்டியப்பன், கதை படிப்பான். அப்படிப்பட்ட பொன்னூர் அக்கரைச் சீமைக்குக் கூலிகளே அனுப்பும் 'பாக்யம்' பெற்று விட்டது —அந்தத் தொகுதியிலே வெற்றி பெற்ற எம். எல். ஏ. கூட, கடல் கடந்த இந்தியர் பாதுகாப்புக் கமிட்டியில் ஓர் உறுப்பினர்—கமிட்டி கூடும் போது நாளொன்றுக்குப் பதினெட்டு ரூபாய் 'படி'ச் செலவு கூடப் பெற்று வந்தார். 'அக்கரை'ச் சீமைக்கு 'அரும்பு மீசை' கிளம்பும்போதெல்

### பெகு மதம்

பெகு நாட்டவர்கள் கொண்டிருந்த மதம், விநோதமானது.

மூலதெய்வங்கள், ஐந்து! இதில் நான்காவது தேவன் 2225 ஆண்டுகளுக்குமுன் இறந்துபோனுன் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது.

ஐந்தாம் தேவன், விரைவில் மோட்சம் சேர்வானும்!

பிறகு உலகமே, நெருப்புக்கு இரையாகுமாம்.

இவர்களுடைய தேவாலயத்துக்கு விர்லான் என்று பெயர்.

ஒவ்வொரு கோயிலிலும் 120,000 விக்ரகங்கள் உண்டு.]

ஆண்டுக்கு மூன்றுமாதம், இவர்கள் தமது வீடுகளேப் பூட்டிவைத்து விடுவார்கள்—ஏனெனில் அந்த மூன்று மாதகாலம், பிசாசுகள் அங்கு வாழ இடமளித்தாகவேண்டும் என்பது மதக்கோட்பாடு.

லாம், கண்ணீரும் கம்பலையுமாகக் கிழங்கள் கூடிக் கூடிப் பேசும்.

போனதும் கடுதாசி போடுகிறேன்!

வீணு, ஏன் மனசை அலட்டிக்கிறே!

மாசாமாசம் தவருமப்படிக்குப் பணம் அனுப்பிவைக்கிறேன்.

மாடு கண்ணு, ஜாக்ரதை!

மாரியம்மன் பண்டிகைக்கு, கிடா பலி கொடுக்க மறந்துவிடாதிங்க.

இவவிதமெல்லாம் 'தைரியம்' கூறி விட்டுத்தான் செல்கிருர்கள், அரும்பு மீசைக்காரர்—"உன் மகனும் கிளம்பி விட்டாளு........." என்று கேட்கும் போதே, கிழவிக்குத் தன் மகன் அக்கரைக்குப் புறப்பட்ட நாளின் நிகழ்ச்சிகள் கவனத்துக்கு வரும்; 'இவனுக்காவது காளியாத்தா நல்ல புத்தி கொடுக்க வேணும்' என்று வாழ்த்துவாள்—மனதுக்குள். அவனிடம் கெஞ்சிக் கூத்தாடி, தன் மகனை எப்படியாவது கண்டுபிடித்து 'கடுதாசி'யைக் கொடுத்து, ஒரு காலணுக் கடுதாசி போடச் சொல்லிலும்படி வேண்டிக் கொள்வாள். ஆகட்டும் பார்க்கலாம்—அந்தச் சீமையிலே, அவன் எந்த மூலேயிலே இருக்கருனே, நான் எந்தக் கோடியிலே வேலேசெய்யப் போறனே, யார் கண்டாங்க, இருந்தாலும் கண்டா, கட்டாயமாக் கடுதாசியைக் கொடுத்து' புத்திமதி சொல்றேன், என்று வாக்களிப்பான், கப்பலுக்குக் கிளம்புபவன். கண்ணுடா நீ! தங்கம்டா நீ!—என்று கிழவி வாழ்த்துவாள். பணம், சிலகுடிசைகளுக்கு வந்தது! கடிதம், பலபேருக்குவத்தது. சிலர், 'நோய் நொடியுடன்' திரும்பி வந்துவிட்டனர்!

கிழவிக்குமட்டும், காலணு கடுதாசியும் கிடைக்கவில்லே — திரும்பியவர்களிடமிருந்து 'மகனேப்பற்றிய செய்தியும் கிடைக்கவில்லே.

*

அன்றுகிழவிக்கு, வழக்கமானவேலே கிடைத்துவிட்டது — வண்டி யோட்டி வரதன், அந்தப்பக்கத்திலே 'பஸ்' ஏற்பட்டுவிட்டதால், நொடித்துப்போனுன்—ஆகவே வண்டிஓட்டும் தொழிலுக்கு முழுக்குப்போட்டுவிட்டு, 'அக்கரை' போகத்தீர்மானித்துவிட்டான் — அவனிடம் 'கடுதாசி' கொடுத்தனுப்பும் வேலே, கிழவிக்கு.

"அவ குலுக்கி மினுக்கித்திரியும் போதே எனக்குத்தெரியும், அவ கெட்டுப்போவா என்பது" என்று கூறுவார்கள் தலே நரைத்தவர்கள், வள்ளியைப்பற்றி, வள்ளிதவறியவள்!

ஆடுவெட்டி ஆண்டியப்பன் தாலி கட்டி வள்ளியைப் பெறவில்லே—தாலி கட்டிய தாண்டவன் காலமான பிறகு வள்ளி நெல் குத்தி ஜீவித்து வந்தாள் -பக்கத்துக்கிராமத்திலே நெல் அரைக்கும் யந்திரம் அமைத்த பிறகு, அவளுக்குப் பிழைப்புக்கு வழி அடைத்துப் போய்விட்டது — ஆண்டியப்பன் அவளே ஜாடைமாடையாகக் கவனிக்க ஆரம்பித்தான்—வள்ளி, "நாசமாப் போவான் — மாரிசரியான கூலி கொடுக்கப் போகிருர்" — என்று சபித்தாள்—அவன் அஞ்சவில்லே—அவள் "அண்ணேன்" என்று முறை கொண்டாடி, அரை, கால்கடன் கேட்டுப் பெற்றுவந்தாள், அவன் வட்டி கேட்கவில்லே, அசலேப்பற்றியும் கவலே காட்டவில்லே—அவள் புரிந்து கொண்டாள்—வெறுப்பாக இருந்தது —ஆனல் எவ்வளவு காலம் வறுமையுடன் போராடமுடியும் — "ஐயயோ! வேணுமுங்கோ" என்று கெஞ்சும் குரலில் தொடங்கி, "எப்பவும் கை விடமாட்டாயே!" என்று கொஞ்சும் குரலில் முடிந்தது, அவளுடைய வீழ்ச்சி"

வள்ளிக்கு, நாலு எழுத்து எழுதப் படிக்கத்தெரியும்.

அவளிடம் சென்று, ஆயிரம் கண்ணே! கற்கண்டே! போட்டு, கிழவி கடிதம் எழுதச் சொன்னுள்.

"சிரஞ்சீவி மணிக்கு,

காளியாயி கடாட்சத்தாலே நான் இன்னமும் உசிரை வச்சிக்கிட்டுத் தான் இருக்கறேன். நான் ஒருத்தி இருக்கறேன் என்கிற நினேப்பே உனக்கு மறந்து போச்சா. உன்னேக் கண்ணுலே கண்டுவிட்டுச் செத்துத் தொலேக்கத்தான் நான் காத்துகிட்டு இருக்கறேன். கேவலம் ஒருபிச்சைக்காரி போல இருக்கறேன். நாலு நாளேக்கு ஒரு தடவை கூடச் சோறு கிடையாது. நான் இப்பவோ பின்னேயோன்னு இருக்கிற இந்தச்சமயத்திலேகூட நீ ஊர்திரும்பாம இருக்கறது தர்மமா! ஒரே ஒரு தடவை வந்துபோ. உன்னேக் காணவேணும் என்கிற ஆசை என்னேக் கொல்லுது. நான் கண்ணே மூடறதுக்குள்ளே, ஒரு முறை பார்த்தாகணும். இங்கே நான் அனுபவிக்கிற தரித்திரம் சொல்லிமுடியாது. ஒரு அஞ்சோ பத்தோ அனுப்பிஞ, நாலேந்து கோழிவாங்கி வளத்து, முட்டை வித்து பிழைச்சிக்கலாம் — நான் சாப்பிட்டது போக மிச்சம் கூடக் கிடைக்கும்—பனிக் காலத்திலே உடல் வெடவெடன்னு ஆடிப் பிராணனே போயிடற மாதிரி ஆயிடுது. ஒரு கம்பளிப் போர்வை அனுப்பிஞ, நல்லது".

கிழவி சொல்லிக்கொண்டே வந்தாள் — வள்ளி எழுதிக்கொண்டே இருந்தாள்.

"இன்னும் என்ன எழுதணும்—பெரிய பாரதமே எழுதியாச்சி—" என்று சலித்துக்கொண்டாள் வள்ளி.

"கண்ணு! இன்னும் ஒரே ஒரு சங்கதி எழுதிடு" என்று கெஞ்சினுள் கிழவி.

"சொல்லித் தொலே" என்ருள் வள்ளி.

கிழவி சொல்லத் தொடங்கினுள், "உன்னுலே பணம்காசு அனுப்ப முடியாவிட்டாலும் பரவாயில்லே, நீ இங்கே வந்து சேர்ந்தா போதும். உன்னேக் கண்ணுலே பார்த்தாலே என் கஷ்டம் அத்தனேயும் தீர்ந்து போகும். அடுத்த கப்பலுக்கே பொறப்படு."

வள்ளி, கட்டாயப்படுத்திக் கிழவியை முடிக்கச் சொன்னுள்.

கடிதத்தை எடுத்துக்கொண்டு கிளம்பினுள் கிழவி, வரதன் குடிசைக்கு.

இதுபோல எத்தனே முறை

## நமது கலாச்சாரம்!

"தமிழ் கலாச்சாரம்!—இதைப்பற்றி பலர் அறியாமலிருக்கிருர்கள். உலக நாகரிகங்களேப்பற்றி எண்ணிஞல். தமிழ் நாகரிகத்துக்கும் தனியிடம் உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது. இந்தியாவிலுள்ள முக்கால்வாசி கலாச்சார முறைகள், தமிழருடையதைப் பின்பற்றியதாகும் என்று நான் அல்ல, பிரபல வங்கப் பேராசிரியர் டாக்டர் சுநுமார் சட்டர்ஜி சொல்லியிருக்கிருர். இந்தியாவில்மட்டுமல்ல, கடல்கடந்த நாடுகள் பலவற்றிலும் தமிழரின் தொன்மையான பழக்க வழக்கங்கள் தொக்கியிருக்கின்றன. 'பாங்காக்'கிலிருக்கும் மத குருமார், அரசாங்க விழாக்களின் போது, தமிழரின் பாடல்களே இசைக்கின்றனர். எனவே, தமிழ் கலாச்சாரம் பற்றிய ஆராய்ச்சிகளே ஐக்கிய நாட்டுச் சபையின் கலாசாரப் பகுதியினர் அவசியம் செய்தல் வேண்டும்" என்று மலாயாவில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்துகொண்ட இலங்கைப் பல்கலேக் கழகப் பேராசிரியர் தனிநாயகம் அவர்கள் வலியுறுத்திப் பேசியிருக்கிருர்.

அனுப்பினேம் — எவ்வளவு உருக்கமான கடிதங்கள் — எத்தனை சாமி மீது ஆணையிட்டு எழுதினேம்— ஏனே அவன் மனம் துளிகூட இரங்கவில்லை—இந்தத் தள்ளாத வயதிலே என்னைத் தவிக்கவிட்டுவிட்டு, அக்கரையிலே சுகமாக இருக்க, எப்படித்தான் அவனுக்கு மனம் வந்ததோ—என்றெல்லாம் எண்ணியபடி கிழவி சென்றுகொண்டிருந்தாள்.

கடிதங்களைப் படிப்பதேயில்லையா—படித்துப் பார்த்தால், பகையாளியாக இருந்தால்கூடப் பரிதாபம் பிறக்குமே.

சரியாகப் படித்திருக்கமாட்டான்—ஒரு கணம் உருகுவான், மறுகணமே மறந்துவிடுவான்—விளையாட்டுச் சுபாவம்—அல்லது வேலை அவ்வளவு கடினமோ, கடிதம் போடக்கூட நேரம் கிடைக்காதோ — என்ன மாயமோ என்ன மர்மமோ, என்று எண்ணிக்கொண்டே சென்றாள்.

"பாட்டியம்மா! பாதை ஓரமாப்போ ......எதிரே காளைமாடு வருது......" என்று அன்புடன் கூறினன், கிராமத்துக்குப் புதிதாக வந்து குடியேறிய பாதிரியப்பன்.

கிராமத்தில் வைத்ய சாலை நடத்திக்கொண்டு, பச்சிலைகளைச் சேகரித்து ஏதோ ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருந்தான் பாதிரியப்பன். கிராமத்தில் நல்ல மதிப்பு. கிழவியைப் 'பாட்டியம்மா' என்று அழைக்கும் ஓரே ஆசாமி, பாதிரியபபன்தான்.

"டாக்டரய்யாவா" என்று கேட்டுக்கொண்டே, அவன் கையைப்பிடித்துக்கொண்டாள் கிழவி. அவளுக்கு ஒரு எண்ணம் உதித்தது. கடிதத்தைமகன் சரியாகப்படிக்கிருனே இல்லையோ என்ற சந்தேகம் போய்விட்டது, எழுதிக் கொடுப்பவர்கள் சரியாக எழுதிக்கொடுக்கிருர்களோ இல்லையோ என்ற சந்தேகமே ஏற்பட்டுவிட்டது.எனவே, கடிதத்தை எடுத்து டாக்டரிடம் கொடுத்து, 'அக்கரையிலே இருக்கிற என்மகனுக்கு அனுப்ப இந்தக்கடுதாசி—படித்துச் சொல்லுங்கோ டாக்டர் அந்தச்சிறுக்கிகிறுக்கின; சரியாஇருக்குதான்னு பார்க்கலாம்' என்று சொன்னள். டாக்டர் கடிதத்தைப் பிரித்தார்—சிரிப்பு வந்துவிட்டது!

"என்ன டாக்டரு! சிரிக்கறிங்க"

"யார் பாட்டியம்மா, கடுதாசி எழுதிக் கொடுத்தது"

"அவதான்—வள்ளி — ஒரு மாதிரியானவன்னு ஊர்லேபேசுவாங்களே, அந்தக் குட்டி-அவளுக்கு எழுதப் படிக்கத் தெரியும்"

"போக்கிரிப் பெண்ணு, பாட்டியம்மா அந்த வள்ளி! கடுதாசியிலே, எழுத்தே கிடையாது—கோலம் 'போட்டு வைத்திருக்கிரு......!

"என்னது......கோலம் போட்டிருக்காளா......பாவி......நான் சொல்லிக்கொண்டே இருந்தேன் அவ எழுதிகிட்டே இருந்தா......"

"உன்னை அந்தப் பெண்ணு ஏமாத்தி விட்டிருக்கா, இருக்கட்டும் பாட்டியம்மா, நான் பார்த்துக் கண்டிக்கிறேன்.

இப்பத்தானே எனக்கு சூட்சமம் புரியுது. என் மகன் பேரிலே கோபித்துக்கொண்டேன் நானு, இந்தச் சூட்சமம் தெரியாததாலே. இந்தப் படுபாவிங்க ஒவ்வொருத்தரும், நான் கடுதாசி எழுதிக் கொடுக்கச் சொன்னபோதெல்லாம், இந்த வள்ளி செய்ததுபோலச் செய்துதான் என்னை ஏமாத்தியிருக்கிருங்க. என் ஆசை மகனுக்கு ஒரு கடுதாசியும் போய்ச் சேர்ந்திருக்காது. அந்தக் கோபம் என் மகனுக்கு. அதனுலேதான் காலணு கடுதாசிகூட அவன் போடல்லே. டாக்டரய்யா! இப்படி ஒரு கிழவியை ஏமாத்தலாமா. நீங்களே சொல்லுங்க, இது தர்மமா"

"வருத்தப்படாதீங்க பாட்டியம்மா—சாயந்திரமா வீட்டுக்கு வாங்க, நான் கடிதம் எழுதித் தருகிறேன்"

டாக்டரை வாழ்த்திக்கொண்டே கிழவி தன் குடிசைப் பக்கம் சென்றாள்.

வள்ளி வீட்டுக்குப் பாதிரியப்பன் சென்று, சற்றுக் கோபமாகவே கண்டித்தான்.

"அது ஒரு பைத்யம் டாக்டரய்யா! நான்மட்டுமில்லை, நம்ம கிராமத்திலே யாருமே, கிழவி கடுதாசி எழுதச் சொன்ன, எதையாவது கிறுக்கித் தருவாங்க. அதுக்கு மூளை சரியில்லை; அதனுலே, இப்படி ஓயாம, கடுதாசி எழுதிக் கொடு கொடுன்னு, உசிரை வாங்கும். அதனுலேதான் நான் கோலம் போட்டேன். தப்பா எண்ணிடாதிங்க. அக்கரையிலே அதுக்கு மகனும் இல்லை, மகளும் இல்லை, அவன் எப்பவோ செத்துப் போயிட்டிருப்பான்—உயிரோடு இருந்தா இத்தனை காலமுமா ஒரு காலணு கடுதாசி போடாதிருப்பான். இங்கே இது பைத்யம் பிடித்துப் போயி, இப்படித் தலைவிரிகோலமா இருக்குது, டாக்டரய்யா. நீங்க ஒன்னும் வித்யாசமா எண்ணிடாதிங்க. அது பைத்யம்" என்று வள்ளி சமாதானம் கூறினள். டாக்டருக்குத் திருப்தி ஏற்படவில்லை.

"என்ன காரணம் சொன்னலும், நீ செய்தது தப்பு வள்ளி — ஒரு தள்ளாத கிழவியை இப்படி ஏமாத்துவது பாபம்" என்ருர்.

"ஐயோ, ஐயோ...நீங்க ஒரு உலகம் தெரியாதவரு...அந்தக் கிழத்துக்குப் புத்தி பேதலிச்சுப் போயிருக்குதுங்க. அதுக்கு மூளை சரியா இருந்தா ஏன் அக்கரை போனவனை நினைச்சிகிட்டே கிடக்கோணும், இப்படி, ஐயா! அம்மான்னு பிச்சை எடுத்துப் பிழைக்க வேணும்-மலையாட்டமா இருக்கிருனே மற்ருெரு மகன் — அவனேடு போய் இருந்துகிட்டு, வயிருரச் சாப்பிடக் கூடாதா—நிம்மதியா கிடக்கலாமே" என்ருள்.

"மற்ருெரு மகன? கிழவிக்கா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்' பாதிரியப்பன்.

"நீங்க கிராமத்துக்குப் புதுசுதானே தெரிந்திருக்காது. கிழவிக்கு இன்னெரு மகன் இருக்கருன் — பெரிய அந்தஸ்த்து இல்லைன்னலும், வயிருர கஞ்சி ஊத்தக்கூடியவன்தான் — சமுசாரி—அடுத்த கிராமத்திலே இருக்கருன்—சன்னசின்னு பேரு..." என்று விவரம் கூறிக்கொண்டே இருக்கும்போது, தொலைவிலே ஆண்டியப்பன் வருவதைக் கண்டு, "அதோ அது வருது. மூக்குமேலே கோபம் அதுக்கு. நாம்ப களங்கமத்து பேசிகிட்டு இருந்தாக்கூட, என்னமோ ஏதோன்னு சந்தேகப்பட்டுகிட்டு சண்டைக்கு வந்து தொலைக்கும். நீங்க போய் வாங்க டாக்டரய்யா — பக்கத்து கிராமம்—சன்னசி — அவனையே கேட்டுப் பாருங்க, கிழவியோட சமாசாரம் புரிந்துபோகும்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்,

சன்னசி பெரிய குடும்பஸ்தன்—நாணயமானவன்.

பெரிய வைக்கோற்போரைச் சரிப்படுத்திக்கொண்டிருந்தான், டாக்டர் அவனைப் பார்க்கச் சென்றபோது.

"ஆமாங்க! என் மானத்தை வாங்கவே, அந்தக் கிழம் அப்படிச் செய்யுது. தலை இறக்கமாத்தான் எனக்கு இருக்குது. தடியாட்டமா நான் இருக்கறேன், சோத்துக்குத் துணிக்குக் குறைச்சல் கிடையாதுங்க-இங்கேவந்து விழுந்து கிடன்னு ஆயிரம் தடவை வந்து கெஞ்சிகேட்டாச்சிங்க, ஒரே பிடிவாதமா வரமாட்டேங்குது—அங்கே பட்டினி கிடைக்குது—பிச்சை எடுக்குது-எனக்கு அவமானம் தாங்கமுடியல்லிங்க"

கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டுச் சாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு
'பாரதத்தாய் பெற்ற மக்களென்று' நிதம்
பல்லவி பாடிப் பயனேதுவோ?

[கவிமணி தேசிக விநாயகம்]

"என்ன விரோதம் உன்னிடம்? உன் சொந்தத் தாயார்தானே?"

"என்னைப் பெத்தவங்கதான். குழந்தையிலேயே என்னை இங்கே கொடுத்துவிட்டாங்க — இங்கேன்னு, இதுவும் 'அன்னியரில்லா, அசலாரில்லா'—எங்க சின்னம்மா வீடு தான்"

"உங்க சின்னம்மாவிடம் விரோதமா?"

"ஒரு இழவும் கிடையாதுங்க. ஆனு இங்கே நான் வந்ததிலே இருந்து, எங்க அம்மா காலடி எடுத்துவைக்கறதில்லே. அது என்ன வைராக்கியமோ, போங்க. என் கல்யாணத்துக்குக்கூட, பத்துபேர் வர்ரதுபோல வந்துவிட்டு, ஒருவேளை கையை நனைச்சிகிட்டுப்போனதுதான். நான் காலிலே விழுந்து கும்பிட்டுக்கூப்பிட்டாக் கூட வரமாட்டேங்குது—காரணமும் சொல்றதில்லே — எனக்குச் சில சமயம் வருகிற கோபம், அதை வெட்டிப் போட்டுவிடலாமான்னு கூடத் தோணுது போங்க. "உங்க அம்மா அங்கே பிச்சை எடுத்துக்கிட்டு இருக்கருடாப்பா, ஏன் அப்படி அவளை அலையவிடறே"ன்னு யாராவது கேட்டா, என் மனசு என்னு பதறிப் போகும், நீங்களே சொல்லுங்க. இப்படி என் மனசை எரியச்செய்துகிட்டு, அங்கே கிடக்குது, நான் என்ன செய்ய?"

"சன்னசி! கோபிக்கரதே! உன் சம்சாரத்தோட எதாச்சும்......"

"அவ 'அப்பிராணிங்க'—மாமியசர் காலிலே விழுந்து கும்பிட்டா புண்யம்னு எண்ணுகிறவ. அவளும், அவளாலே ஆனமட்டும் கூப்பிட்டுப் பாத்தாச்சி. நம்ம 'கொழந்தை'கள் கூப்பிட்டே வரலே, போங்களேன்"

"என்னப்பா இது அதிசயமா இருக்கு"

"அதிசயமா? அக்ரமம்னு சொல்லுங்க டாக்டரய்யா! வர்ர பழி வரட்டும்னு அதை அடிச்சுக் கொண்ணு போடலாமானுகூட ஆத்திரம் வருது, தெரியுங்களா"

டாக்டர் பாதிரியப்பனுக்குப் பச்சிலை ஆராய்ச்சியிலே கூட மனம் செல்லவில்லை. இந்தக் கிழவியின் விசித்திரப் போக்கு அவருக்கு மனக் குழப்பமே உண்டாக்கிவிட்டது. கிழவியைக் கண்டே கேட்பது என்று தீர்மானித்தார்.

*

"அவன் பேச்சை மட்டும் எடுக்காதிங்க......"

"அவன் நல்லவனு இருக்கானே பாட்டி"

"தங்கமானவன்......அவன் சம்சாரமும் குணசாலி......எவ்வளவோ அன்பாத்தான் என்னைக் கூப்பிடருங்க...... ஆனு......"

"என்ன அனுவும் ஆவன்னுவும் ............"

"அவன், என் மகனில்லிங்க......"

"உன் மகனில்லையா.........உனக்கென்ன வள்ளி சொன்னதுபோல, மூளை குழம்பி இருக்குதா.........உன் மகன் இல்லையா......

"நான் பெத்தவன்தான் சன்னசி ......ஆனு......டாக்டரய்யா, இதை மனசோடே போட்டுவையுங்கோ...... முக்கியமா அவனுக்குத் தெரியப்படாது.........தெரிந்தா குடும்பத்துக்கே ஆபத்து......நான்தான் பெத்தேன்......ஆனு, அவன் பேய் மகன் ........."

"பைத்யமே தான் உனக்கு. பேய் மகனுவது பூதத்தின் மகனுவது...... என்ன கிழவி உளறிக் கொட்டறே...',

"உங்களுக்கெல்லாம், என்ன தெரியும்......இந்தக் காலத்துப் பிள்ளைங்க ......சன்னசி, பேய்க்குப்பொறந்தவன் அவனுக்கும் தெரியாது, கிராமத்திலே யாருக்கும் தெரியாது......இப்ப உங்ககிட்ட சொல்கிறேன் — பேய்க்குப் பொறந்தவன் சன்னசி — அதனுலே தான், பொறந்தமூனுமாசமே அவனை என் தங்கச்சிக்குத் 'தத்து' கொடுத்து விட்டேன்."

"பாட்டி! உனக்கு, மூத்தமகன் அக்கரை போயிட்ட துக்கத்தாலே மூளை குழம்பியிருக்கு......"

கேள் டாக்டரய்யா......மூளையாவது குழம்பறதாவது......மணி பொறந்து அஞ்சு வருஷத்துக்குப் பிறகு, இவன் பொறந்தான்......இவன் என் வயித்திலே கரு தரிக்கிறதுக்கு ஒரு வருஷத்துக்கு முந்தி, என்னை திருக்குளத்துப் பேய் பிடிச்சிடுச்சி, பேயை ஒட்ட 'அவரு' படாதபாடுபட்டாரு—செலவு கண்மண் தெரியாமச் செய்தாரு—அந்தப் பாழாப்போன பேய் ஒழியமாட்டேன்னு சொல்லிடிச்சி. சூடுவைச்சி பாத்தாங்க, தலைமுழுக்கு, வேப்பஞ் சேலைகட்டி மாரியம்மன் கோயிலிலே சுற்றி வர்ரது, ஒண்ணு பாக்கியில்லை, திருக்குளத்துப்பேய் எதுக்கும் மசியலலே. எனக்குப் பேய்பிடிச்சிருந்த போதுதான்கருதரிச்சுது, இந்தப் பய பொறந்தான்—அவனைத்தான் நீங்க பார்த்திங்களே — இலட்சணமாயிருப்பான்—அவன் பொறந்ததும், ஊர்க் கோடியிலே இருந்த ஒரு பிரம்மாண்டமான புளியமரம் வேரோடச் சாய்ந்து கீழேவிழுந்தது......இடி இடிச்சி, மாரியம்மன் கோயில் கோபுரத்திலே விழுந்து, அதை இடிச்சித் தள்ளிவிட்டுது, எங்க வீட்டிலே இரண்டுபடிகறக்கும் அருமையானபசுமாடு, அது 'காவ் காவ்'னு கத்திக்கிட்டே கீழே 'தொபீல்னு' விழுந்து செத்துப் போச்சு, அப்பப்பா! அவன் பொறந்ததும் ஊருக்கே பெரிய ஆபத்துன்னு வையுங்களேன், அப்படியெல்லாம் நேரிட்டுது.

இதோடு போச்சா; அவரு, அவங்க அப்பாரு, நல்லா இருந்த மனுஷனுக்குக் காச்சல் கண்டு, வாயிலே 'தொப்பும் நொரையும் தள்ளி, கைகால் இழுப்பு வந்துடிச்சி. எனக்குப் பயம், சந்தேகம், துக்கம். பூஜாரியைக் கூப்பிட்டு, என்னய்யா இதுன்னு கேட்டேன், "எல்லாம் திருக்குளத்துப் பேய் செய்கிற வேலை"ன்னு சொல்லி விட்டு, அவன் சொன்னுன், "உன் குடும்பமும் இந்தக் கிராமமும் நாசமாகாமே இருக்கவேணும்னு, முத்தம்மா! இந்தச் சிசுவை நீ வளர்க்கக் கூடாது. இது பேய்க்குப் பொறந்தது. அதனுலேதான் இவ்வளவு ஆபத்து. இதை நீ உன் வீட்டிலே வளரச் செய்தா, ஒரே வருஷத்திலே அப்பனை முழுங்கிவிடும்; பிறகு, நீ, உன் மூத்தவன், இப்படி 'காவு' வாங்கிக் கொண்டே இருக்கும். அதனுலே இதை வேறே யாருக்காவது 'தத்து' கொடுத்துவிடு. உன் பிள்ளை என்கிற எண்ணமே கூடாது. நீயும் 'இதுவும்' ஒரே கூரையிலே இருந்தாலே ஆபத்துதான். ஒரு ஐஞ்சு நிமிஷத்துக்கு மேலே, நீ இதைப் பார்த்தாக்கூட ஆபத்து ஏற்படும். இது பேய்க்குப் பொறந்தது என்று சொன்னுன். மூணு மாசம் என் தங்கச்சி தூக்கிகிட்டுப் போனு, அதிலே இருந்து அங்கேயே அவன் இருந்துகிட்டான். ஆனதாலேதான் டாக்டரய்யா, நான் அவனேடே போய் இருக்கமுடியறதில்லை, இதை அவனுக்குச் சொல்லவும்கூடாதுன்னு பூஜாரி சொல்லியிருக்கருன். மகன் என்கிற பாசத்தாலோ, இந்தத் தள்ளாத வயதிலே நிம்மதியா இருக்கலாமே என்கிற எண்ணத்தாலேயோ, நான் அவனேடே போய் இருக்கறதுன்னு, என்னுலே, ஊருக்கே நாசம் வந்துவிடுமே, அந்தப் பாவத்தைச் சுமக்கச் சொல்றிங்

'பம்பாய்' தரும் விருந்து

**முயற்சி**

சிறப்பு மலர்

48 பக்கங்கள் : : விலை அணு எட்டு

தனிப்பிரதிவேண்டுவோர் 10 அணு தபால் தலைகள் அனுப்பவும்.

வியாபாரிகட்கு 25% கழிவு உண்டு

விபரங்கட்கு :—

தி. மு. கழகம்

"திராவிடரகம்"

26, லெதர்பஜார் – தாராவி

பம்பாய்-17.

களா. அவனும் குழந்தை குட்டிகளோட இப்ப சுகமா இருக்கறான்—நானும் அவனும் ஒரே கூரையின்கீழே இருக்கஆரம்பிச்சா, அந்தப்பேய்அவன் குழந்தை குட்டிகளையும் 'காவு' கேட்டு விடும். அதனாலேதான், 'அக்கரை' போயிருக்கிற என் மகன் வருகிற வரையிலே என்ன வேதனையானாலும் அனுபவிச்சுகிட்டு இருக்கறதுன்னு ஏற்பட்டுப் போச்சு'' என்று கிழவி கூறினாள். டாக்டருக்கு வந்த ஆத்திரத்துக்கு அளவே இல்லை ''எங்கே அந்தப் பூஜாரி?'' என்று கோபமாகக் கேட்டார்—''அவன் செத்து வருஷம் ஆறு ஆவுதே'' என்றாள் கிழவி.

என்ன செய்வான் பாதிரியப்பன், பேயாவது பூதமாவது, சாபமாவது என்று சொன்னால், கிழவியால் நம்ப முடியுமா! பல கலை வல்லவர்களே அந்த மயக்கத்திலிருந்து விடுபட முடியாது தவிக்கிறார்கள்—இந்தக் கிழவிக்கு 'பகுத்தறிவு' வாதம்செய்து காட்டி, பேய் பூதம் பிசாசு என்பதெல்லாம் கட்டுக்கதை, பூஜாரி ஒரு புரட்டன், அவன் சொன்னது அத்தனையும் அர்த்தமற்றது, என்று ஒப்புக் கொள்ளும்படி எப்படிச் செய்யமுடியும். ஆக்ஸ்போர்டும் கேம்பிரிட்ஜும் படித்துவிட்டு, மனைவிமார்களை அரசமரம் சுற்றிவரச் செய்வதற்கு, அமெரிக்கன் மாடல் மோடாரில் அனுப்பி வைக்கிறார்கள். இந்தக் கிழவிக்குப் பகுத்தறிவு புகட்டவா முடியும்!

''பாட்டி! எவனோ ஒரு மூடன்சொன்னதை நம்பி, நாசமாகித் தொலைக் காதே'' என்று கூறினார்.

''மூடனா! யாரைச் சொல்கிறாயப்பா பூஜாரியையா! செச்சே! அவனுக்கு, ராமாயணம், பாரதம், கந்தபுராணம், எல்லாம் மனப்பாடம். ஜோதிடம் தெரியும். இந்தப் பக்கத்திலேயே, ரொம்பக்கியாதி அவனுக்கு'' என்று கிழவி கூறிவிட்டு, ஏன் இந்தக் காலத்திலே, இதை எல்லாம் நம்ப மறுக்கிறார்கள் என்று எண்ணி வருத்தப் பட்டுக் கொண்டாள்.

என்னசெய்வதென்று தெரியாமல், சிலைபோலானார் டாக்டர்.

''டாக்டரய்யா! என் வினை அது, அதுக்கு யார் என்ன செய்யமுடியும். விட்டுத்தள்ளுங்க. நீங்க வீண் பொழுதை ஓட்டாமபடிக்கு, ஒரு கடுதாசி எழுதிக்கொடுங்க, என்று கெஞ்சினாள்.

டாக்டரின் கண்களிலே நீர்கசிந்தது—கோபமும் கொப்பளித்துக் கொண்டு வந்தது.

ஆனால், யார்மீது கோபித்துக்கொள்வது!!

★

# திரும்பி வந்த சிங்காரம்!

[சிங்காரம், ஆவடியிலிருந்து திரும்புகிறார், வெற்றிபெற்ற வீரனைப்போல். ஊருக்குப் போனதும், ஊரார் அவரைச் சுற்றி நின்றுகொண்டு கேட்கப்போகும் காட்சிகளும், அதற்குத் தான் பதில் கூறும் வைபவமும், அவரது மனக்கண் முன்பு, உருண்டோடுகின்றன. அவராகவே சிரித்துக் கொள்கிறார். அவரை முதலில் சந்திக்கிறார், முத்துப்பிள்ளை — ஒரு விவசாயி]

மு:- அண்ணாச்சி இப்பத்தான் பட்டணத்திலேருந்து வரீங்களா! ரயிலிலே ஏகக் கூட்டமாமே — மூட்டைகளை அடுக்கிவைக்கிறது போல இருந்ததாமே, ஆளக் கூட்டம்........

சிங்:- ஆமாம்! கூட்டம் என்றால் சாதாரணக் கூட்டமா......இரண்டு மூன்று லட்சம் இருக்கும்..........எங்கேயிருந்தெல்லாம் வந்திருந்தாங்க தெரியுமா! இந்தியா முழுமையிலிருந்தும் வந்திருந்தாங்க! அடடா........பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேணும் முத்து, பதினாயிரம் கண்கள் வேணும்......

மு:- தனியாகவே, ஒரு 'டவுன்' கட்டியிருந்தாங்களாமே!

சிங்:- ஆமாம்! அதுதான் சத்யமூர்த்தி நகர்......என்னென்ன ஏற்பாடு தெரியுமா! இட்லி சுடமட்டும் ஒரு பெரிய 'பாய்லர்' மலைமலையாக் குவிச்சாங்க! சாப்பாடு......அடடா! ......பந்திக்கு ஆயிரம்பேர்......எத்தனைபந்தி தெரியுமோ?

மு:- இனமா போட்டாங்களா சாப்பாடு!

சிங்:- ரூபாய் ஒண்ணுதான்! ஆனால், சாப்பாடு.....ரூபாய் அஞ்சு தாலும்...அவ்வளவு அருமை! அவ்வளவு அருமை!!

மு:- காரைக்குடியிலிருந்து நூறுபேர் நூறுகாரிலே, நேரா ஊர்வலம் போலே, வந்தாங்களாமே சென்னைக்கு........

சிங்:- நூறுகார் என்ன! எத்தனை ஆயிரம் கார் வந்திருந்தது தெரியுமா? ஊம்! இந்தக் கழகத்து ஆசாமிங்க, ஒரு மாநாடு கூட்டம்னு வைச்சுகிட்டு, அலைவானுவளே, ஒரு ஓட்டைக் காருக்கு! ஆவடியிலே, மாநாட்டுக்காரங்களுக்காக, எத்தனை பஸ்—எத்தனை கார் ஓடுச்சு தெரியுமா!

மு:- ஏதுண்ணே, அவ்வளவு?

சிங்:- ஏதா! முத்து நீ ஒரு பைத்யம்...காங்கிரஸ் கட்சின்னா என்ன சாதாரணக் கட்சியா! டி. வி. எஸ். முதலாளி என்ன, சிம்ஸன் கம்பெனிக்காரங்க என்ன, நீ நான்னு போட்டி போட்டுகிட்டுல்லே வந்தாங்க உதவி செய்ய......

முத்:- அத்தனை முதலாளிகளும் ஏண்ணே; உதவிசெஞ்சாங்க......?

சிங்:- ஏன் உதவி செஞ்சாங்களா!...இதென்னப்பா, கேள்வி... ஏன் உதவி செய்வாங்க. நீதான் சொல்லேன்!

முத்:- இல்லேண்ணே, மத்த கட்சின்னா......சிறு உதவிகூட செய்யமுடியாதுங்கிறவங்க, காங்கிரசுக்குமட்டும் ஏண்ணே இப்படி ஓடி ஓடியாந்து உதவி செய்யணும்!!

சிங்:- இதென்னப்பா............ கோயங்கா இல்லே, கோயங்கா—அதான்! தினமணி, எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளை நடத்துறாரே...

முத்:- ஆமாம்! 'கிராஸ் வேர்ட்ஸ்' கம்பெனி கூட நடத்துறாரே......

சிங்;- அவர்தான்! அவரு, தன்னுடைய பெரிய பெரிய பங்களாக்களையெல்லாம் திறந்து விட்டுட்டாரு........

முத்:- ஜனங்கள், தங்கவா!

சிங்:- ஜனங்களுக்குத் திறந்து விடுவாங்களா? தலைவர்கள் தங்கத்தான்! அவரைப்போல இருக்கிற பெரிய பணக்காரங்க........லட்சம் லட்சமா பணம் கொடுத்தாங்க......

வடபாதிமங்கலம் மிராசுதார் பந்தல் போட சவுக்குமரமாய் ஒரு 20,000-கொடுத்தார்! கோயம்புத்தூரிலேயிருக்கிற மில்லுக்காரங்க லட்சரூபாய் பணமா கொடுத்தாங்க! மதுரையிலே இருக்கிற ஹார்விமில்......

முத்:- வெள்ளைக்காரங்க மில்லா!

சிங்:- ஆமாம்! பாரு........நம்ப காங்கிரஸ் மாநாடுன்னு சொன்னதும் வெள்ளைக்காரங்க கூட ஒரு லட்ச ரூபாய் கொடுத்தாங்க!

முத்:- என்னண்ணே! எல்லாம், லட்சம் லட்சமாவே சொல்றீயே...

சிங்:- பின்னே, என்ன, முத்து? அவ்வளவு பணம்! அடடா........ மாநாட்டுக்காக தனியாகவே ஒரு ரயில்வே ஸ்டேஷன்......

முத்:- தனியாக, ஒரு ரயில்வே ஸ்டேஷனா!

சிங்:- ஆமாம்!

முத்:- என்னண்ணே......நம்ப ஊர்லேயிருக்கிற ஒரு ரயில்வே ஸ்டேஷன் பேரை மாத்தணும்னா, முடியாதுன்னு சுட்டுத் தள்ளினாங்களே! புதுசாவே ஸ்டேஷன் கட்டினாங்களா!

சிங்:- ஸ்டேஷன் மட்டுமா? எல்லாமே புதுசுதான்! எத்தனை வீடுகள் தெரியுமா!

முத்:- புதுசாவா?

சிங்:- ஆமாம்!

முத்:- காங்கிரஸ் பணமா!

சிங்:- சர்க்கார் பணமுந்தான்!

முத்:- அப்பா......ஒரே அமர்க்களம்தான்னு சொல்லு......

சிங்:- அமர்க்களமா! முத்து... அதைப்பற்றி வர்ணிக்கிறதுன்னா ஆயிரம் நாக்கு வைச்சிருக்கிற ஆதிசேஷன் தாம்பா வரணும்...

[இப்போது கழகத்து கந்தாமி, அந்தப் பக்கமாக வரவே, சிங்காரத்தின் 'சுருதி' அதிகமாகிறது]

அடடா! பண்டித நேருஜியைப் படம்பிடிக்க எத்தனை போட்டோக்காரங்க தெரியுமா........அவரைப் பார்த்தா, ஜனங்களே, பலாச்சுளை மேல் ஈ மொய்க்கிறதுபோல எப்படிப் பாய்ந்தாங்க தெரியுமா......

முத்து:- ஏண்ணே! அவரு எப்படியண்ணே, இருக்காரு......

சிங்:- எப்படி இருக்காரா! முத்து ...அவரைப் பார்க்கிறப்ப எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? ஒரு நிமிஷம்கூடச் சும்மா இல்லே. அங்கே போறதும் இங்கே வர்ரதும், 'பைலை'ப் புரட்டறதும், விளையாட்டுக் காண்பிக்கிறதும்,........ முத்து, ஒரு தடவை என்ன செய்தார் தெரியுமா?

மு:- என்னண்ணே செய்தார்?

சி:- தலையணையெல்லாம் போட்டிருந்தாங்க, மேடையிலே... அந்தத் தலையணை ஒண்ணை எடுத்து ஓங்கி வீசினாரு......

மு:- யாரு மேலே?

சி:- மற்ற தலைவருங்க மேலே! அவுங்க திடுக்கிட்டு திரும்பிப் பார்த்து, விழிச்சாங்க......நேருவா செய்திருக்கமுடியும் என்கிற எண்ணம்........அப்படித்தானே நினைப்பாங்க. தலையணையை எடுத்து எறிஞ்ச அவர் என்ன செய்தார் தெரியுமா? ஒண்ணும் தெரியாதவர் போல உட்கார்ந்திருந்தார்.

மு:- யாரு, நேருவா?

சி:- நேரு அவ்வளவு 'ஜாலி'யா இருந்தாரு...அப்புறம் மாநாட்டுப் பந்தல் முழுமையும் எப்படிப்பட்ட அலங்காரம் தெரியுமா? ஜெமினி ஸ்டுடியோக்காரங்க, அரும்பாடுபட்டு, செஞ்சிருந்தாங்க.

மு:- யாரு?

சி:- அதாண்ணே! 'ஜெமினி' ஸ்டுடியோக்காரங்க...

மு: சொல்லு...அலங்காரம் அவ்வளவு நல்லா இருந்துச்சு அப்புறம் ...... என்னென்ன பேசினாங்க...

சி:- எவ்வளவோ பேசினாங்க. ஆனால், முக்கியமான விஷயம், பொருளாதாரத்திலே நாடு முன்னேறணும், அதுக்கு சோஷியலிச மாதிரியில் நாட்டைக் கொண்டு போகணும்னு முக்கியமான தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினாங்க...

மு:- கொஞ்சம் விளங்கறப்போல சொல்லண்ணே...

சி:- சோஷியலிசம்னா, ஏழை பணக்காரங்க என்கிற பேதம் இல்லாமெ எல்லாரும் ஒண்ணா வாழ்றது......

மு:- அப்படியா தீர்மானம் போட்டிருக்காங்க...

சி:- அதுபோல ஒரு தீர்மானம்,,,

மு:- அதுபோலன்னா! தீர்மானம் அந்த விஷயத்தைக் குறிச்சு இல்லியா...

சி:- அவ்வளவு வெளிப்படையா போட முடியுமா...பாரு......தேசத்திலே பலதரப்பட்ட ஜனங்களும் தானே இருக்காங்க... அவுங்களுக்கும் சேர்த்துத்தானே சுயராஜ்யம் வாங்கி இருக்கோம்........அவுங்களுடைய உரிமைகளில் திடீரென கைவைக்கலாமோ? அது ஜனநாயகம் இல்லே பாரு, அதனாலே...

மு:- என்னண்ணே, ஏழை பணக்காரன் இல்லாத ராஜ்யம் ஏற்படுத்துற தீர்மானம்னு சொன்னே...... இப்ப, பணக்காரங்களும் வாழ்றதுதானே ஜனநாயகம்; அவுங்கமட்டும் வாழவேணுமான்னு கேட்கிறீயே...

சிங்:- அதுதான் முத்து, இந்தத் தீர்மானத்திலேயிருக்கிற முக்கிய விஷயம் — ஏழைங்க வாழணும்கிறதுக்காக மேல்நாட்டிலே யெல்லாம் புரட்சி என்கிற பெயராலே இரத்தமும் சண்டையும் ஏற்பட்டுச்சு......நம்ப நாட்டிலே அப்படியெல்லாம் ஏற்படாமெ, புதுமாதிரியா, ஏழைங்களையும் பணக்காரங்களையும் ஒண்ணாக்கப்போறோம்!

முத்:- அது என்ன மாதிரி அண்ணே, புது மாதிரி!

சிங்:- ஒரு பக்கத்திலே பெரிய ஆலைகளையெல்லாம் சர்க்காரும் ஆரம்பிக்கும்! இன்னொரு பக்கத்திலே தனிப்பட்ட முதலாளிகளும் செய்வாங்க!

முத்:- இதிலே என்ன புது மாதிரி......

சிங்:- இல்லியா, பிறகு!

முத்:- அண்ணே! எனக்குக் கொஞ்சம் விளங்கிறப்போல சொல்லண்ணே........ ஏழையும் பணக்காரங்களும்ஒண்ணாகணும்னா, பணம் எங்கே குவிஞ்சிருக்கோ அதையெல்லாம் சர்க்கார்லே கணக்கெடுத்து — ஆலையாகவும், வயலாகவும், கம்பெனியாகவும் காடாகவும் இருக்கிறதையெல்லாம்–சர்க்காருடைய சொத்துன்னு சொல்லி, பிறகு அததுக்கு ஒரு 'போர்டு' ஒண்ணு வைச்சு, அந்த 'போர்டு'மூலம் அந்தந்த தொழில் நடக்கும்படி செய்தா என்ன அண்ணே! அந்த 'போர்டு'களிலே வேணும்னா, எந்தெந்த தொழிலிலே எந்தெந்த பணக்காரர் சிறந்து

(10-ம் பக்கம் பார்க்க)

**நன்றி**

பொங்கல் வாழ்த்தனுப்பிய அனைவருக்கும் எமது உளங் கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேம்.

—ஆசிரியர்.

திராவிடநாடு

காஞ்சி] 30—1—55 [ஞாயிறு

# ஒரு "மேளா"!

கொடி பறந்தது அறுபது அடியில், கூடியிருந்தோர் ஐந்து லட்சம், நேரு தூக்கியெறிந்தார் தலைபணையை, ஆசாத் பேசக்கேட்டோம், மணிக்கு இரண்டாயிரம் இட்லி வேகிறது பாரீர், கோபுரம்போல வாயில், கோலாகலமாகச் சத்ய மூர்த்தி சிலை, காட்சி என்ன காட்சியே, என்று நாள்விடாது வர்ணித்த; "இந்து" ஏடு, ஆவடி மாநாட்டைப் பற்றி அரியதொரு 'தீர்ப்பு' வழங்கிவிட்டது! அன்பர்கள், கேட்டால், கோபிப்பர்—நம்மீது; அளிப்பது, 'இந்து' ஏடு! ஆகவே, கூறுகிறேம், துணிந்து. எந்தத் தலைவரைப்பற்றி, மண்ணுக்குள் கிடந்த மாணிக்கம், தொண்டர் தம் தூயன், சொல்மாரி முழுதும் கருத்துக்கூடு என்று ஏட்டாளரும் தேசிய நண்பர்களும் செப்பினரோ, அந்தத் தலைவர், கொட்டினாராம் குழப்பங்களை! ஆவடியில்!! கூறுகிறது அது. தலைவர், குழப்பங்களைக் கொட்டினாராம், பேச்சில்! அவர் மட்டுமல்ல, அகில உலகத் தலைவர் நேரு முதல், மாநாட்டில் வீரகர்ஜனை செய்த பலர் உள்பட, என்ன சொல்கிறேம் என்பதையே அறியாது பேசினராம்! ஏடு, 'இந்து' அல்லவா? ஏனே தானேவெனக் கூறுமா! விபரங்களைத் தந்து, விளாசுகிறது. நீங்களும் நானும் சொன்னல், கோபம், குதிக்கும் கோலோச்சும் கூடாரத்தினருக்கு! கூறுகிறது, இந்து! கூடினரே மக்கள் ஆவடியில், அவர்கள் அத்தனைபேரும், கூடியது எதற்காக? ஓங்கி வளர்ந்த சங்கம்! எங்கள் உத்தமர் வளர்த்த சங்கம்!—என்று, போற்றவா, அல்ல. உன்னத சுதந்திரம் கொண்டு தந்தது! எமது ஒப்பற்ற காங்கிரசுக்கு வைர விழா இங்கே!—என்ற ஆனந்தத்திலா, அல்ல. புதுவழி கூறும்! புனிதர்கள் தேடும்! புத்திக்கு, திக்கும் செய்திகள் தரும்!—என்கிற நோக்கத்துக்காகவா, கூடினர் மக்கள்? அல்லவாம்! கூறுகிறது, இந்து. நேருவைப் பார்க்கவும், அவர்போன்ற அகில இந்தியத் தலைவர்களின் உருவைப் பார்க்காவிடினும் குரலொலியையாவது கேட்போம் எனும் ஆவலுடனும் கூடினராம். என்ன கோபம்வரும், தேசிய நண்பர்களுக்கு, நாம் சொன்னல். இந்து, கூறுகிறது, தலையங்கத்தில்! சென்னை காங்கிரஸ் இந்த உண்மையை—அதாவது நபர்களைநம்பி, போற்றி, வாழும் அரசியலின் உண்மையைத்தான் காட்டிற்றும்! தெளிவாகச் சொன்னல், மக்கள் கூடியது விஷய விளக்கம்பெற அல்லவாம்—நேருவைக் காணவாம்! தலைவர்களைப் பார்க்கவாம்!!

களிக்கட்டும், களிப்பதற்காகக் கூடட்டும்—இந்திய காங்கிரஸ் தலைவர்களைப்பற்றி ஏடும் நாடும் வர்ணித்து ஏற்றி வைத்திருக்கும் இடம், சாதாரணமானதல்ல. சுதந்திர ஜோதிகள்! அவர்களைக் காணவும் களிக்கவும் கூடிவிட்டுப் போகட்டும். ஆனல், அதற்கு வியாக்யானம்போல, இந்து தருவதையே எல்லோருடைய கவனத்துக்கும் கொண்டுவர விரும்புகிறேம், மக்கள், கூடினர்களல்லவா? காங்கிரஸ்செய்யப்போவதைப்பற்றி கவலைப்படாது, களிக்கும் காட்சியெனவும், விடுமுறை விழாவெனவும், கருதி. அதே மனேபாவத்துடனேயே, ஆவடியில், தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவாம்!! நாட்டின் 'விதி'யைநிர்ணயிக்கும் தீர்மானங்கள்! எதற்காகத் தீர்மானம் என்கிற ஆலோசனையின்றி, 'தூக்கு' என்றதும் 'கை தூக்கி' 'போடு' என்றதும் 'போட்டு' தீர்மானங்கள் யாவும் நிறைவேற்றப் பட்டிருக்கின்றனவாம். 'இந்து'வின் மொழியில், சொல்லவேண்டுமானல், காங்கிரஸ் தலைவர்கள்' மக்களின் அங்கீகாரம் என்கிற 'முத்திரை'யை வெகு சுலபத்தில் பெற்றுவிட்டார்களாம்—எதற்கு? ஏன்? என்ன பயன்? — என்கிற ஆலோசனை செய்யவும் இடம் தராமல்.

*

ஆலோசனை செய்ய இடம் தராததுமட்டுமல்ல — அவர்களும்கூட ஆலோசனை செய்யவில்லையாம். அதனல், எதற்காக இப்படியெல்லாம் சொல்லுகிறேம் என்றுகூட புரியாமல் ஏதேதோ பேசினர்களாம். இந்தக் குற்றச்சாட்டை நேற்றுவந்த தேபர்மீதுமட்டுமல்ல, நேருவின்மீதும் சுமத்தத் தவறவில்லை, இந்து. இத்தனை நாளும் இல்லாமல் இதையெல்லாம் ஏன் வெளிப்படுத்துகிறது அது, என்பீர்கள். காங்கிரஸ் கட்சி, ஏதோ அரைத்த மாவை அரைத்துவிட்டுப் போகாமல் எதை எதையோ புதிது புதிதாகச் சொல்லக் கிளம்புகிறதே—என்கிற கோபம், இந்துவுக்கு.

புதிது புதிதாகச் சொல்கிறது என்பதைக் காட்டி 'பார், எமது காங்கிரசை! முதலாளிகளின் முன்னேடும் பிள்ளை என்றுயே. காங்கிரஸ்கூடச் சொல்லிவிட்டது, சோஷியலிசமே இனி அதன் குறிக்கோள்" என்று கூவ முயலலாம், கொடி தூக்கி உழைத்த நண்பர்கள். ஆவடி, ஒரு புது ஒளி. சரித முக்கியத்துவம் பெற்ற மாநாடு. புதுத்திசை நோக்கிப் புறப்பட்டுவிட்டது—என்றெல்லாம்கூட போற்றக் கிளம்பலாம். அவர்களைப் பார்த்துத்தான் 'இந்து' கேட்கிறது. "ஏனய்யா இந்தக் குழப்பம். ஒன்றுமே புரியாமல் அடிக்கிறீர்களே? சரித முக்கியத்துவம் வாய்ந்தது. சோஷியலிசமே இனி எமது குறிக்கோள் என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டோம் என்று ஒருவர் பேசுகிறர். இன்னெருவர், 'இது ஒன்றும் புதுமையல்ல, கராச்சி காங்கிரசிலிருந்தே இதுதான் எமது இலட்சி

## 'மெயில்' ஆசிரியர்

ஆங்கில தின ஏடான "மெயில்" ஆசிரியர் ஆல்பிரட் ஆர்தர் ஹெயில்ஸ் என்பார் கடந்த 22-ந் தேதி காலமானர். 67-வயது நிரம்பிய இவர், 43-ஆண்டுகளாகப் பத்திரிகைத் துறையில் பணியாற்றி வந்தார். எதற்கும் அஞ்சாத பண்பும், நாட்டின் நாடிகளை பயமின்றி எடுத்துரைக்கும் பேறுவும் பெற்றவர். இவருடைய மரணத்தால், சென்னை, ஒரு உன்னதமான ஆசிரியரை இழந்துவிட்டது.

யம்; அப்போதே காங்கிரஸ் சொல்லிவிட்டது' என்று வர்ணிக்கிறார். ஏனிந்தக் கோளாறு?" எனக் கேட்கிறது. மறந்திடவேண்டாம்—இந்து கேட்பது, எரிச்சலின் காரணமாக. இப்படியெல்லாம் ஏன் காங்கிரசுக்கும் முன்னேற்றக் கொள்கைகளைக் கண்டு குலை நடுக்கம் ஏற்படவேண்டும் என்கிற கோபத்தால் கேட்கிறது. 'இந்து' வட்டாரம், பழமைக்கும் புதுமைக்கும் இடையிலே 'பாலம்' போட முயலும் காங்கிரசை, பழையபடி வைதீக பீடத்துக்குக் கொண்டு செல்ல முயன்று வருவதாகும்.

அந்த முயற்சியை அறிந்ததாலேயே அவர்களுக்கும் மனக்கசப்பு இல்லாமல், புதுமை எண்ணம் விரும்பிகளுக்கும் 'வான்கோழி' ஆகி, இரண்டுக்குமிடையிலே அல்லாடிக் கொண்டிருக்கிறது, இந்திய தேசிய காங்கிரஸ்! அதுதான் ஆவடி!!

இந்த அருவருக்கத்தக்க நிலைமையால்தான், காங்கிரஸ் மாநாட்டில் குழப்பங்கள் தென்படுகின்றன—பேச்சில். அந்தக் குழப்பங்களைக் கூற ஆரம்பிக்கிறது, 'இந்து'. அதன் நோக்கம் வேறு—ஆயினும், அந்தக் குழப்பங்களை, புதுமை நாடும் போக்கினரும் அலட்சியம் செய்துவிடமுடியாது. ஏனெனில், எதிர்காலத்தின்மீது அதிக அக்கரை கொண்டவர்கள் நாம்; அதுமட்டுமல்ல, எந்தவிதத்தில் எதிர்காலம் இருக்கவேண்டுமென முன்னேற்றக் கட்சிகள் முழக்கமிட்டு வருகின்றனவோ, அந்த முழக்கங்களுக்கு முட்டுக்கட்டைப் போட்டு வளர்ந்துவரும் உரிமைக் குமுறலின் குரலை ஒடுக்க முனைகிறது தேசியம். சர்வோதயம்! ராமராஜ்யம்! வருணாச்சிரம தர்மம்!—எனும் கோஷங்களை இதுகாறும் செவிடுபடச் செப்பியோர், இன்று, சோஷியலிச மாதிரியில், சுவர்க்கபூமியாக்கப்போகிறார்களாம் தேசத்தை. சோஷியலிசம்! — என்று துணிவோடு சொல்ல முடியவில்லை — 'இந்து'க்கள் இருப்பதால். சொல்லாமலும் இருக்கமுடியவில்லை, முன்னேற்ற இயக்கங்கள், நாள்தோறும் வளர்வதால். அதனால், சோஷியலிச மாதிரியில்......!— என்று, சொல்லக் கிளம்பியிருக்கின்றனர். நேரு சொல்லும் சோஷியலிசம், ரஷ்யா சீனாவில் இருப்பதுபோல இருக்காது. பிரிட்டன், அமெரிக்கா போல்வும் நாடு இருக்காது. இதிலே கொஞ்சம், அதிலே கொஞ்சம், இரண்டும் போட்டு சமைத்த சாப்பாடாக இருக்கும்—சுருங்கச் சொன்னால், இரண்டும் கெட்டானாக இருக்கும்! புலியும் வாய் பிளந்து உலவும்—புள்ளிமானும், மிரண்டு ஒடுங்கிக் கிடக்கும். இதென்ன சோஷியலிசம்; யாருக்கும் விளங்காத சோஷியலிசம். கலாபமயில், காட்டிலேயிருந்தாலும் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டாலும், மயில் மயில்தான். அதனைப் பாதியாக்கி, மற்றோர் பாதியில் மந்தியின் உருவைப் பொருத்தி, இது ஒருவித புதுமயில்-எமது கண்டுபிடிப்பு, என்றால், சிரிப்பர், கேட்போர். ஆனால், ஆவடியில் கூடியோர், சிரிக்கவில்லை—அதனால்தான், 'இந்து', ததாஸ்துபோடச் சென்ற கூட்டம் என்கிறது மக்களை.

*

'சோஷியலிசம்' பற்றிய முடிவு மட்டுமல்ல, மாநாட்டில் ஒருவர் தீர்மானம் ஒன்று கொண்டு வந்தாராம் "கம்பெனிகளை வைத்து நடத்துவோர், முதலாளி டைரக்டர் என்கிற பெயர்களில் மாதாமாதம் ஏராளமான பணத்தை ஏப்பமிட்டு வருகின்றனர். அரசாளும் மந்திரிகளைவிட, அதிகமான வருவாயில் அவர்கள் வாழுகின்றனர். இதைத் தடுக்கச் சட்டம் கொண்டுவர வேண்டும்," என்பதாக. மேடு, கூடாது! பள்ளம் சரிப்படுத்த வேண்டும்!!—என்பது, தீர்மானம். 'மாதிரி சோஷியலிசம்', என்ன சொல்லிற்று தெரியுமா? காரிய சாத்தியமல்ல! தொல்லைகள் ஏற்படும்!!—என்று சொல்லி, தீர்மானத்தை நிராகரித்துவிட்டது. ஆலை அதிபர்கள், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள், பாங்கி நடத்துவோர் பற்றிய தீர்மானம் இது! இதற்கு, சாத்யமில்லை—தொல்லைகள் வளரும், என்று நிராகரிப்பு. ஆனால், அதே நேரத்தில், ஆவடியினர் விவசாயிகள் பற்றி ஒரு தீர்மானம் செய்துள்ளனர். அதன்படி, விவசாயிகளின் உற்பத்திக்கு மட்டும், நிரந்தரமான ஒரு விலை நிர்ணயிக்கப்படுமாம். ஆலை முதலாளி, ஆயிரக்கணக்கில் சம்பளம் பெறுவான்! ஏழை விவசாயி, இரும்பு என்ன விலை விற்றாலும், ஏர்கலப்பை, செய்ய எவ்வளவு ரூபாய் அதிகமானாலும், என்றும் சிரஞ்சீவியாய் ஒரே விலை பெற்றுக் கொண்டேயிருப்பான்!! எப்படி, மாதிரி சோஷியலிசம்? மேடும், பள்ளமும் சமமாகும் புதுவித்தையின் விந்தையைப்பார்த்தீர்களா!!

குழப்பம் இந்த அளவோடு, இல்லை—விரைவில், ஒவ்வொரு நிலப் பிரபுவும் இவ்வளவு நிலம் தான் வைத்துக் கொள்ளவேண்டும் என்று நிர்ணயிக்கப்படும் என்றும் பேசியிருக்கிறார்கள். அதாவது, நம் பக்கம் வருகிறார்கள்! நாடு முழுமையும், கழனிகளிலே புயல் உருவாகின்றதல்லவா? அதன் விளைவு, இந்த சோஷியலிசம்! அதற்கு அருகிலேயே, ஆலைகளை தனிப்பட்டவர்கள் துவக்கி நடத்தலாம்—என்று விளக்கம்! இதுதான், மாதிரி சோஷியலிசம்!!

அதாவது, ஏழை விவசாயிகளுக்கு நிலத்தை வாங்கிக்கொடுத்ததற்காக நிலப்பிரபுவுக்கு, நேருசர்க்கார், பணம் கொடுக்கும்—'நஷ்ட ஈடாக'. அந்தப் பணத்தைக் கொண்டு, நிலப்பிரபுவாக இருந்தவன், ஆலையரசன் ஆவான்! 'வடபாதி மங்கலம்' பண்ணை, 'டாடாபுரம்', ஆக மாறும்!! இது என்ன, கசக்குமா. அவர்களுக்கு? வயலில் அவதிப்படுவதைவிட, நகரத்தில் ஆலை அதிபதியாகி சுகமாக வாழலாமே என்று ஓடோடியும் வருவர், நிலப்பிரபுக்கள். மாதிரி சோஷியலிசம் வழங்கப்போகும், புரட்சி வழிகளில் இதுவும் ஒன்று.

கழனியில் சமதர்மம், ஆலையில் கிடையாது, வயலில் வாடுவோனுக்கு கூலி நிர்ணயம் உண்டு, ஆலை அதிபனுக்கு லாபக் கட்டுப்பாடு கிடையாது—என்று ஒன்றுக்கொன்று முரணான விஷயங்கள், முடிவு கட்டப்பட்டிருக்கின்றன. பாலைவனம்! பக்கத்திலே சோலைவனம்! கள்ளிக்காடு! பக்கத்திலே முல்லைச்சோலை!—இப்படிச் சொல்லுகின்றனர். இதைத்தான், குழப்பங்களைக் கொட்டினர், என்கிறது இந்து.

*

**கவர்ச்சிதரக்கூடிய வகையில்,**
**புதிய கோஷங்களைத் தரமுயன்று,**
**குழப்பியிருப்பதே,**
**ஆவடியின் முடிவு!**

என்றும். ஏடு, விமர்சனம் செய்திருக்கிறது! இதனையே, நாட்டிலுள்ளோரும் சொல்லி வருகின்றனர். ஆவடியில், லட்சக்கணக்கில் பணம் கிடைத்திருக்கலாம், நேருவையும் பிறரையும் பார்த்த மக்கள் வாழ்க வாழ்க என்றும் கூவியிருக்கலாம், ஆனால் கிடைத்த பலன் என்ன? புது ஒளி ஏதாவதுண்டா. கிடையாது. ஆனால், தங்களது கோஷங்

களுக்கு, புது 'முலாம்'பூச முயற்சித்திருக்கிறார்கள், தலைவர்கள். வளர்ந்துவரும் புதுமைகள் எதுவும் காங்கிரசிலில்லையே என்று வருந்தியோர் வசம், முலாம் பூசப்பட்ட தட்டுகளைத் தந்திருக்கிறார்கள்—தட்டி ஒலிபரப்பச் சொல்லி! மக்களும் ஆவடி நாட்களை, விடுமுறை விழாபோல எண்ணி, தமிழிலும் இந்தியிலும் இங்கிலீஷிலுமாக நடைபெற்ற கதம்பங்களைக் கேட்டுவிட்டு, அங்கு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பற்றி புகழ்ந்துவிட்டுத் திரும்பியிருக்கிறார்கள்! இதுதான், ஆவடியின் பரிசு, இதனை, நாமல்ல; அவர்கள் போற்றும் 'இந்து' ஏடு கூறுகிறது.

★

7-ம் பக்கத் தொடர்ச்சி

விளங்கினாரோ அவர்களுக்கு இடம் கூடக் கொடுக்கலாமேண்ணே.

கந்த:- சபாஷ்! அப்படிக் கேளு ...எந்த முதலாளியாவது அப்படிப்பட்ட போர்டுகளுடன் ஒத்துழைக்க முடியாதென்று சொன்னால், ஆறு மாதம், ஒரு வருஷம்னு தண்டனையும் ஏற்படுத்தினா யார் மறுப்பாங்க; யார் முடியாதுன்னு சொல்லமுடியும்!

மு:- சிங்காரத்தண்ணே! ஏண்ணே பேசாம இருக்கே—இப்படிச் செஞ்சா என்னண்ணே...

சி:- முத்து, நீ என்னமோ, நல்ல ஆளாச்சேன்னு உன்னிடம் பேச வந்தேன்...நீயும், இந்த கந்தசாமி கட்சியிலே சேர்ந்திருக்கேன்னு இப்பதான் புரியறது...

மு:- நல்ல விஷயத்துக்கு, கட்சியாவது, காமாட்சியாவது! அண்ணே......நிஜமா, என் புத்தியிலே பட்டதைத்தான் சொல்றேன்......

கந்த:- அது ரொம்பத் தப்பாச்சே சுயராஜ்ய பூமியில்!

சி:- எது ரொம்ப தப்பு?

கந்த:- புத்தியிலே பட்டதைச் சொல்றது!!

மு:- அப்ப, எங்களையெல்லாம்... என்னண்ணு நினேச்சே!

கந்த:- நம்பி மோசம் போய்க்கொண்டிருக்கும் சகோதரர்கள் என்று நினைக்கிறேன்......

சி:- எனக்கு நீ தம்பியாகவும் இருக்கவேண்டாம்! உனக்கு நான் அண்ணனாகவும் இருக்கமுடியாது!

கந்த:- அந்த உறவு, நீயும் நானும் ஏற்படுத்திக்கொள்வதல்ல—சிங்காரம்! நீ சென்றிருந்த மாநாட்டில், தமிழில் பேசமுயன்ற தமிழர்களைப் பார்த்து, வடநாட்டார் எழுந்துசென்றனரே அந்த நிகழ்ச்சியும்—வடநாட்டினர் பேசியபோது, 'புரியவில்லையே' என நீங்களெல்லாம் திகைத்தீர்களே, அந்தக் காட்சியும் காட்டுகிற உறவு! சிங்காரம்... இரத்தபாசத்தை, எதுவும் துண்டாடிட முடியாது......நேருவும் பேசினார்! தீர்மானமும் நிறைவேறியது என்று ஆனந்தத்துடன் வந்திருக்கிறாயே! உனது ஆனந்தத்தை நான் குறைக்க விரும்புவதாக எண்ணாதே......ஆனால் ஆனந்த ஆரவாரத்தில் உண்மையை உணரவும் தவறிவிடாதே......... சோஷியலிச மாதிரி தீர்மானம் நிறைவேற்றம் பட்டதல்லவா? சர்க்கார், அந்தத் தீர்மானப்படிதானே இனிமேல், காரியங்களைச் செய்யும்?

சி:- ஆமாம், திட்டக் கமிஷன் கூட, அதுபற்றி விரைவில் ஆலோசிக்கப்போகிறதே......

கந்த:- ஆலோசிக்கட்டும்! நன்றாக ஆலோசிக்கட்டும்!! அவர்கள் ஆலோசனையின் முடிவைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால், உன்னை ஆலோசிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். கமிட்டிக் கூட்டத்தில்,கம்பெனிகளை வைத்து நடத்தும் முதலாளிகள் **மாதாமாதம் லட்சக் கணக்கில் சம்பளம் எடுத்துக் கொள்வதைத் தடுக்கவேண்டும்** என்று ஒரு தீர்மானம் வந்ததா?

சி:- வந்தது!

கந்த:- நிறைவேற்றப்பட்டதா?

சி:- இல்லை! பிறகு பார்க்கலாம், என்று ஒத்திவைக்கப்பட்டது......

கந்த:- தீர்மானம்......முதலாளிகள் ஆடும் பணவேட்டையைக் குறைக்கச் சொல்லுகிறது தீர்மானம்! அது ஒத்திவைக்கப் பட்டது!! அதேநேரத்தில், சோஷியலிச மாதிரியில் நாட்டை ஆக்கப் போகிறோம் என்று வீராவேசமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது!

மு:— உண்மையாகவா, கந்தசாமி!

க:- பொய்களைச் சொல்லவேண்டிய அவசியம் எனக்கென்ன முத்து! நாடு நல்மலர்ச் சோலையாக வேண்டும் என்று கனவு காண்பவன் நான்...அது என்னால்தான் நடக்கவேண்டும் என்கிற பேராசை படைத்தவனுமல்ல........ உனக்கே தெரியும். ஆனால், எதற்காக இப்படி 'சீசன் வேட்டு' போடவேண்டுமெனக் கேட்கிறேன்.

மு:- பதில் சொல்லேன், சிங்காரம்.

சிங்:- ரொம்பக் களைப்பாயிருக்கிறது ஊரிலிருந்துவந்தது...பிறகு வருகிறேன்.

[சிங்காரத்தின் மனதில் 'ஆவடி'க் காட்சிகள் அனைத்தும் மறைகின்றன. கந்தசாமி கிளப்பிய கேள்விகள் கூடிய முகத்தைத் தொங்க விட்டவண்ணம் வேக வேகமாகப் போகிறார்]

★

## 'அதை' விடுவாரா?

அன்பர் பண்டித நேரு, பெரியதோர் அறிக்கையைச் சமர்ப்பித்தாராம், கட்சிக்கு — தான் தலைவராயிருந்தபோது சாதித்த காரியங்களைப்பற்றி.

அதில், கம்யூனிஸ்டுக் கட்சியின் போக்கை எள்ளி நகையாடியும், எரிச்சல் சொற்களாலும் குறிப்பிட்டுள்ளார். அப்படிக் குறிப்பிட்டிருப்பதில், கவனத்துக்குரிய வாசகம் **'முட்டாள்தனம்'** என்பதாகும்.

"ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்வரை நமது குடியரசு தின விழாவைக்கூட இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி தீவிரமாக எதிர்த்து வந்தது. இதைவிட முட்டாள்தனம் வேறென்ன இருக்கமுடியும்?"—என்கிறார், நேரு.

மமதைத் தேரில் ஏறி பவனி வருவோருக்கு மற்றையோர் சர்வ சாதாரணமாகத் தென்படுவர். அன்பர் நேருவுக்கு, நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகள் என்றால், மிக மிகக் கேவலமாகத் தென்படுகிறது.

'நான்சென்ஸ்', 'காட்டுமிராண்டி' என்றெல்லாம் ஏசி, தன் புகழ்முடியில் மாசுகளைக் குவித்துக்கொண்டார், முன்பு.

அந்தப் பழக்கம் இன்னும் அவரை விட்டுவிடவில்லை. அதனாலேயே 'முட்டாள்' என்கிறார், கம்யூனிஸ்டுக் கட்சியை. பெரிய அகில் உலகச் சுடர்தான்—ஆனால், அது கையாளும் அரசியல் அக்ராதி இவ்வளவு மட்டமாகவா இருக்கவேண்டும்! செச்சே!!

★

தொடர் சித்திரம்

# கடிகாரம்

10

அண்ணா

அனந்தராமய்யரின் மகன் ஜெயமணி, தன்னுடைய 'அரசியல் தலைவன்' என்கிற பட்டத்துக்காக, எங்கள் குடும்பத்தைக் குட்டிச்சுவராக்கினான். அதனையும் மறந்தேன் நான், ஆபத்து என்று அழுது, ஒண்ட இடம்கேட்டு ஓடிவந்த போது! அப்பாவின் யோசனைப்படி, இரவோடு இரவாய் ஊரை விட்டுக் கிளம்பிவிட்டான். அவன், ஒரு வார்த்தை கூட என்னிடம் சொல்லவில்லை! அதோடு, சிங்காரமடத்தில் விவசாயிகளைக் கொண்டு கொள்ளையடித்த மூட்டையையும், இரகசியமாக அனந்தராமய்யரிடம் கொடுத்துவிட்டுப் போகிறான். கொடுக்கும்போது கீழே விழுந்த கடிகாரம்தான், இது! இந்தக் கடிகாரத்தைப் பார்த்த போது, ஜயமணி செய்திருக்கும் தீமையான காரியம், எனக்குத் தெரிந்தது. அவனைப் பகலிலே ஏசி, 'என்மகனா!' என்றெல்லாம் கர்ஜித்த அய்யர், இப்போது எவ்வளவு ரகசியமாக மூட்டையை வாங்கிக்கொண்டு போய்விட்டார்!! விவசாயிகளை வீம்புக்கு இரையாக்கிய 'வீரன்' போய்விட்டான்—ஊரைவிட்டு. ஆனால் போலீசாரோ, அவன் வில்லுக்கு இரையான அம்புகளான விவசாயிகளை வேட்டையாடினர். அவர்களிலே ஒருவன், குப்பன். அவனுடைய மனைவி சுப்பி. அப்பா நன்றாக வாழ்ந்த காலத்திலும் சரி, நாங்கள் கெட்டுக்கிடக்கும் இந்தச் சமயத்திலும் சரி எங்கள்மீது மாறாத அன்புடன் இருந்துவந்த ஏழைக் குடும்பம், அது. சுப்பிக்கு அது பத்தாவதுமாசம்! தலைப்பிரசவம்!! இந்த நிலையில் மனைவியை விட்டுவிட்டு ஜெயிலுக்குப்போக யாருக்கு மனசு வரும்? குப்பன், தத்தளித்தான்! போலீசாரின் கண்களுக்கு அகப்படாமல் திரிந்தான்! அவனைப் பிடிக்க, போலீசார், தினசரி வட்டமிடலாயினர், எங்கள் கிராமத்தில். குப்பனைப் போன்றோரைத் தூண்டிவிட்ட ஜெயமணி, போய்விட்டான்! ஆனால், இரையான ஏழைகளோ, வேட்டையாடப்பட்டார்கள்! கடைசியில், குப்பனையும், ஒரு நாள் போலீசார் பிடித்துவிட்டார்கள். அன்றுதான், சுப்பிக்கு, பிரசவதினம்! வெளியே இடியும் மழையும். உள்ளே அதோடு போட்டியிடும் வேதனைகளைத் தாங்கிக்கொண்டு, சுப்பி—இப்படிப்பட்ட சமயத்தில் குப்பன், சேரியில் தானிருப்பான் என்கிற சங்கதி எப்படியோ தெரிந்து போலீசார், வந்து வளைத்துக்கொண்டார்கள்! குப்பனைப்பிடித்து, அடித்துத் துவைத்து, லாரியில் இழுத்துப் போட்டார்கள்!! "ஐயா! ஐயா!! இன்னும் அஞ்சு நிமிஷத்தில் எனக்குக் குழந்தை பிறக்கப் போகுது, ஐயா! ஒரே ஒரு தடவை, என் கண்ணாலே பார்த்துவிட்டு நீங்க கூப்பிடற இடத்துக்கு வர்றேன் ஐயா!" என்று குப்பன் எவ்வளவோ, கெஞ்சினான். விடுவார்களா! என்ன ஆவது, சட்டம்!! குப்பன், இங்கே, சித்ரவதைக்கு ஆளாகி சிறைச்சாலை நோக்கி இழுத்துச் செல்லப்பட்டான். அவன் மனைவி சுப்பிக்கு, பிரசவ வேதனையோடு கூட இது ஓர் வேதனை.

புழுப்போலத் துடித்தாளாம்; அந்த அபாக்கியவதி. இவ்வளவு அல்லலுக்கும் காரணமான 'வீரன் ஜயமணியோ' அப்பாவின் யோசனைப்படி 'அண்டர்கிரவுண்ட்' சென்றுவிட்டான்! அவனுடைய அப்பாவோ, "பகவான் ஆசிரமம்" என்ற பெயரால் புது மாடி வீடு ஒன்று கட்டிக்கொண்டிருந்தார், எங்கள் ஊரில்! மாடிவீடுகட்ட, ஏது பணம் என்கிற விபரம், எனக்குத் தெரியும். மகனும் அப்பாவும், அன்றிரவு, பேசிக்கொண்டதைக் கேட்டவளாச்சே நான்! அவன் தேடிக் கொடுத்த பணத்தில், 'பகவான் ஆசிரமம்' உருவாகிக்கொண்டிருந்தது. பெயர்தான் ஆசிரமமேயொழிய, வீடு, பெரிய மாடிவீடு! 'பகவான் ஆசிரமம்' என்பது பெயரேயொழிய, அதில் முனிவர்களும் முக்திப்பாதையினரும் வாழ்வதற்காக அல்ல, கட்டப்பட்டது! அனந்தராமய்யர் வீடு கட்டுகிறார், இங்கே — 'கிரகப்பிரவேசத்துக்கு' வரவேண்டுமென்று சிங்கார மடத்து ஜகத்குருவையும் போய்க் கூப்பிட்டுவந்தாராம். பகவான் ஆசிரமத்துக்கான ஒவ்வொரு செங்கல்லும் சுண்ணாம்பும், சிங்கார மடத்து ஆபரணங்களும் தங்கமும் தந்தவை என்பது எனக்குத் தெரியும்! அந்த வீட்டுக்கு 'விஜயம்' செய்ய, அதே மடத்து ஜகத்குருவை அழைக்கிறார், அனந்தராமய்யர்!! அதையும் ஜகத்குரு ஏற்றுக்கொள்கிறார் — ஊராரும், அனந்தராமய்யரின் பக்தியையும் பகவத் உபாசனையையும் பாராட்டுகிறார்கள்......இந்த விசித்திரத்தை எங்கு போய்ச் சொல்வது! தந்தையின் திருவிளையாடல், இப்படி. மகனோ, இதைவிடப் பெரிய திருவிளையாடல் புரிந்துவிட்டான்! பேப்பரில் எல்லாம் அவனுடைய படத்தைப்போட்டு அதற்கு அருகே, "விவசாய வீரர் ஜெயமணியின் வீர முடிவு" என்று கொட்டை எழுத்தில் புகழ்ந்து எழுதியிருந்தார்கள். அவன், விவசாயக் கட்சியிலிருந்து விலகிவிட்டானாம்! அதைத்தான், 'வீர முடிவு' என்கிறது, ஏடு, அந்த வீர முடிவுக்கான' காரணம் என்ன, தெரியுமா? 'தேசம் என்பது ஒரு கிளி. அது இப்போது அந்நியர்கள் என்னும் கூண்டில் அடைப்பட்டுக் கிடக்கிறது' என்று முன்பெல்லாம் சண்டைபோடுவது போலப் பேசுவார் ஒருவர் என்று சொன்னேனே அந்த மாமாவிடம், அனந்தராமய்யரின் யோசனைப்படி சென்றுவிட்டான், ஜெயமணி. அவருக்கு, இப்போது, சர்க்காரில் ஏக செல்வாக்காம்! மந்திரிகள் எல்லாம் வேண்டியவர்களாம்! அதனால் 'விவசாய வீரர் ஜெயமணியின் வீர முடிவு'க்குப்பின், அவர்மீது எந்த வித நடவடிக்கையும் எடுப்பது தேவையில்லையென்று சொல்லி, சாதாரண எச்சரிக்கையோடு விட்டுவிட்டார்களாம். அந்த 'வீரரின்'

விளையாடலுக்கு இரையான குப்பனே, வேதனையான நேரத்தில் இழுத்துச் செல்லப்பட்டான், அடி உதைகளுடன்! அவனைச் சேர்ந்த விவசாயிகளுக்கும், நீதிமன்றம், மூனுவருஷம் இரண்டு வருஷம், என்று தண்டனை அளிக்கத் தவறவில்லை!! இத்தனைக்கும் காரணமான 'தலைவர்' படம், வர்ணனைகளோடு வருகிறது, பத்திரிகையில். வீர முடிவாம், அவன் விலகியது! இந்த விஷயங்களையெல்லாம், எண்ணும்போது, எரிமலையாகும் என் மனம். யாரிடம் சொல்லமுடியும், நான்! சொன்னால்தான் யார் நம்புவார்கள்! அப்பாவுக்கும் நிலைமை முன்புபோல இல்லை. ஏக்கத்தால் வாடிய அவரை வாதநோய்வேறு பிடித்துக்கொண்டது. எழும்பவும் நகரவும் முடியாதநிலை. ஏஜெண்டு, ஆக இருந்தநேரத்தில், இந்தநோய் வந்திருந்தால், எத்தனையோ பேர் விசாரிக்க வருவார்கள்! அப்பாவும் எத்தனையோ டாக்டர்களிடம் போயிருப்பார்! இப்போது.........? சொன்னால் நம்பக்கூடமாட்டீர்கள் —நான், வயலுக்குச் சென்றேன்! எதற்கு? நாற்று நன்றாக இருக்கிறதா, பயிர் வளர்வது எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்கா —அல்ல, அல்ல. நடவு நட! கூலி வேலை செய்ய!! எங்கள் காலம் இப்படி நகர்ந்துகொண்டிருந்தது. ஜெயமணியின் குடும்பமோ, புதுவீட்டுக்குக் குடிபோகும் குதூகலத்தில் கிடந்தது. ஊரார், என்னையும் அப்பாவையும் பார்க்கும்போது அனுதாபப்படத் தயங்கவில்லை! அதே நேரத்தில் அனந்தராமய்யரின் புது வீட்டை வாய்பிளந்தபடி பார்த்துக் கொண்டு நிற்கவும் தயங்கவில்லை!!

என் வாழ்க்கையில், நான் மறக்க முடியாத தினம் வந்தது. ஏக அமர்க்களம் ஊரில். அய்யர் வீட்டு கிருகப்பிரவேசம். பெரிய பெரிய மேளக் கச்சேரிகள்; பாட்டுக் கச்சேரிகள். கிருகப்பிரவேசத்துக்கு சென்னையிலிருந்த ஜெயமணியும் வந்திருப்பதாகச் சொன்னார்கள்.

அதைக் கேட்டபோது, என் மனதில், ஒரு யோசனை தோன்றிற்று. அவன் திருடியதன் அடையாளமாக இருக்கும் இந்தக் கடிகாரத்தை எடுத்துக்கொண்டுபோய் அவனிடம் காட்டி, "ஏய்! நீ ஊரை ஏமாற்றலாம்; ஊராரும் உன்னைக் கண்டு ஏமாறலாம்; ஆனால், என்னை ஏமாற்ற முடியாது. இவ்வளவு பெரிய வீடு கட்ட ஏது பணம் என்கிற இரகசியம் எனக்குத் தெரியும். பாவி! பழிகாரா! பார் இதை. ஏனிப்படி, ஏழைகளை வஞ்சித்து ஏழடுக்கு மாடி கட்டுகிறாய்? அக்கிரமங்கள் ஆயிரம் செய்தாலும் கடைசியில் ஆண்டவனின் பெயரைச் சொல்லி ஆராதனை செய்துவிட்டால் போதுமா?" என்றெல்லாம் அலறி ஊராருக்கு உண்மையை எடுத்துச் சொல்லவேண்டும் என்கிற உத்வேகத்துடன் போனேன். ஜகத்குரு, அலங்கரிக்கப்பட்ட ஆசனத்திலே இருந்தார்—அவருக்குப் பக்கத்தில் பக்திசிரத்தையோடு அனந்தராமய்யர் நின்றுகொண்டிருந்தார், அவருக்குப் பக்கத்திலே ஜெயமணி நிற்கிறான். எந்த ஜெயமணி? மகேசனிருக்குமிடம் மக்கள் உள்ளங்களில்—என்பானே, அந்த ஜெயமணி. சாதியாவது பேதமாவது என்பானே அந்த ஜெயமணி நிற்கிறான்—புரட்சி வீரனாக அல்ல; பிராமணோத்தமனாக!! மார்பிலே பூணூல் புரள்கிறது, அந்த மாவீரனுக்கு. அடடா, என்ன கனிவு! என்ன பக்தி! ஜகத்குருவின் காலிலும் விழுகிறான்.

*

"ஏதோ காலவித்யாசம்; பையன் புத்தி கெட்டு அது இதுன்னு சொல்லிண்டு, கொஞ்சநாள் கெட்டலைஞ்சான். குருதேவாளோட ஆசிரமத்திலேகூட, பறையாள் பாதம்பட நேரலாச்சு. காரணம் இவனில்லே. எவ்வளவோ சொன்னேனும் அந்த மூடாத்மாக்கள் கேட்கலே. என்னமோ போதாத காலம். இப்ப, புத்தி சரியாயிட்டுது. அதிலேருந்து பையனுக்கு எப்பவும் தங்களோடெ திருநாம ஜபம் தான். அனுக்கிரகம் பண்ணணும்......"

"அதனாலென்ன? வாலிப காலத்தில் உங்கள் பையன் என்ன, அநேகமா எல்லா குழந்தைகளும் கெட்டலையறது சகஜம். ஈஸ்வரனுடை அனுக்கிரகம் எப்போதுமே இலேசிலே கிடைக்கிறதில்லே. மோக்ஷ சாம்ராஜ்யத்துக்குப் போன பக்தாளுடைய கதைகளைத்தான் பாருங்களேன்-திருவிளையாடல்கள் அனந்தகோடி உண்டு. பாத்திரத்தைத் துலக்கிப் பளிச்சின்னு செய்யறதுக்கு முந்தி, புளியோ கல்லோ போட்டுத்தானே தேய்க்கிறோம். சின்ன வயசில், இப்படிப்பட்ட அனுபவம் ஏற்படுகிறது, வாழ்க்கைக்கே ஒரு விடிமோட்சம்னு!"

*

அனந்தராமய்யரும், ஜகத் குருவும்—'ஜெயமணி'யைப்பற்றிப் பேசிக் கொண்டனர், இவ்விதம். ஜெயமணியின் கூத்துக்கள், ஆண்டவனின் திருவிளையாடலாம்! ஈசுவர சோதனையாம். இப்படித்தான், பக்தர்களை, ஆண்டவன் சோதிப்பது வழக்கமாம்!—இந்த வார்த்தைகளைக் கேட்ட எனக்கு, போட்டிருந்த பந்தலுக்குத் தீமூட்டி, வந்திருந்த எல்லோரையும் சாம்பலாக்கிவிடலாம் என்கிற அளவுக்கு ஆத்திரம் வந்தது. மடியிலிருந்த கடிகாரத்தைத் தொட்டுப் பார்த்துக்கொண்டேன்! எதிரே இருக்கும் ஜகத்குரு—ஜெயமணி—அவன் அப்பா—பக்தகோடிகள் எல்லோரையும் ஒருமுறை பார்த்தேன். என் மனக்கண்ணில் குடிசையில் தவிக்கும் அப்பா—சிறு வயதில் ஜெயமணி என்னிடம் நடந்தவிதம் — காராக்கிரகத்திலே கிடக்கும் குப்பன் முதலியோர் தோன்றி மறைந்தனர். எரிந்து கொண்டிருக்கும் குத்துவிளக்கை எடுத்து திடீரெனப் பந்தலுக்குக் காட்டினால்...! பந்தல் பஸ்பமாகும்—தீ, புது வீட்டுக்குத் தாவும், சிறிது நேரத்தில்...! என் மனதில், எரிமலை, பூகம்பம் எல்லாம் ஏற்படலாயிற்று. துணிந்துவிட்டேன். 'இரண்டிலொன்று—எது நேர்ந்தாலும் சரி' என்று தீர்மானித்துவிட்டேன்.

(வளரும்)

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

**1955 ஜனவரியிலிருந்து புதுக் கணக்குப் போடவேண்டியிருப்பதால் ஏஜண்டுத் தோழர்கள் பட்டியல் தொகை முழுவதையும் பாக்கிவைக்காது 6—2—55க்குள் இங்கு கிடைக்கும்படி அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.**

**பொறுப்பாளர்,**
திராவிட நாடு.

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

[பேராசிரியர் இருதயராஜ்]

ரோமானியரின் அரசியற் கருத்துக்கள்.

அரசியல் அறிவு கிரீஸில் வளர்ச்சி பெற்றதைப் போல் ரோமில் வளரவில்லை, பிளேட்டோ அரிஸ்டாட்டில் போன்ற மேதைகளை ரோமில் காணமுடியாது.

உலகில் அரசியலறிவு வளர்ச்சிக்கு கிரேக்கரைப்போல் அவ்வளவு ரோமானியர் உதவாமற் போய்விட்டாலும் மேநாடுகளில் சட்ட நிறுவனம், நீதி மன்ற அமைப்புகள் முதலியவைகள் ஏற்படுவதற்கு ரோமானியரின் ஆட்சிமுறைகள் மிகவும் உதவின.

ரோமானியரின் ஆட்சி முறைகள் வளர்ச்சியை ஆராய வேண்டுமானால் ரோம் நகரம் தோன்றியதிலிருந்து அது ஓர் சாம்ராஜ்யத்தின் தலைநகர்மாக மாறின வரை அதன் சரித்திரத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.

"ரோம்"

அங்கும் இங்குமாகக் குடியிருந்த சின்னஞ் சிறு மக்கட் கூட்டங்கள் ஒன்று சேர்ந்து இதாலியில் டைபர் நதிக்கரையில் ரோம் நகரத்தை உண்டாக்கின, ஆரம்பத்தில் அந்நகரத்தை ஆள ஒரு அரசனும் அவனுக்கு ஆலோசனை செய்து உதவ ஒரு செனேட் சபையும், அத்துடன் ஒரு சட்டசபையும் (Comitia Curiata) கொண்ட ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ரோமில் வாழ்ந்த மக்கள் (Patrician, Plebian,) பிரபுக்கள், சாதாரண மக்கள் என்று இரு பிரிவாக பிரிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் இருவருக்குமிடையே எவ்வித சம்பந்தமும் கிடையாது, ஆட்சிப்பொறுப்பு எல்லாம் Patrician என்ற பிரபுக்கள் கையிலேயே இருந்தது. செனெட், சட்ட மன்றம் இவை இரண்டிலும் பிரபுக்களே இருந்தனர். சாதாரண மக்கள் இவைகளில் அங்கம் வகிக்கவே முடியாது. எனவே பிரபுக்கள் வம்சம் சுகபோகத்தில் வாழ்ந்து ஆட்சிப் பொறுப்பை ஏகபோக உரிமையாகக் கொண்டிருந்தது, பிளெபியன் மக்கள், அடிமைகளாக, எடுபிடி ஆட்களாக, ஆட்சியில் எவ்வித பங்குமின்றி தாசர்களாய், தற்குறிகளாய் வாழ்ந்து வந்தனர்.

'முடியாட்சி' வீழ...

முடியாட்சி நீடித்த வரையில் இந்த நிலைமை நீடித்தது. கடைசி மன்னன் ரோமிலிருந்து விரட்டப்பட்டபிறகு மன்னனுக்குப் பதிலாக Consul என்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். மன்னராட்சி நீங்கினதால் சாதாரண மக்களுக்கு எவ்விதத்திலும் விமோசனம் பிறந்ததாகத் தெரியவில்லை. பிரபுக்கள் அதிகாரிகளானார்கள்.

> அரசியல்! —மோகனமான சொல். ஒவ்வொருவர் உதடுகளிலும் கூத்தாடுகின்ற சொல். ஆனால், அதன் சரிதம், பலருக்கு விளங்காத புதிர். நண்பர் இருதயராஜ், அதனை விளக்கும் வகையில், தீட்டி வரும் இந்த விளக்கம், சுவையுள்ள விருந்து. இந்த வாரம் உலகம் போற்றும் ரோமாபுரியின் ஆரம்பகால அரசியலை ஆராய்கிறார்.

பிளபியன்களு (சாதாரண மக்கள்) டைய நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை. பட்ரீஷியன்களுடைய ஆதிக்கத்தின் கீழேயே எப்பொழுதும்போல் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு கிடந்தனர். சட்டங்கள் தொகுக்கப்பட்டு எழுதப்படவில்லை. பிரபுக்களுக்குத்தான் சட்டங்கள் தெரியும், அவர்களே சட்டங்களை பிரயோகித்தார்கள். நீதிமன்றம் அவர்களுடைய கையிலேயே இருந்தது, மன்னராட்சிக்குப் பின் நிலைமை மாறும், சுகம் பிறக்கும் என்று கருதிய பிளெபியன்கள் ஏமாந்தார்கள்.

நாளடைவில் ரோமுக்குச் சுற்றுபுறங்களில் பகைவர் கிளம்பினர். ரோமின் மீது படையெடுத்தனர். அவர்களை விரட்டியடித்து நகரத்தைக் காப்பாற்றுவதற்கு பட்ரீஷியன்கள் பிளெபியன்களுடைய உதவியை நாட வேண்டியதாயிற்று. ஆபத்து வேளையில் உதவி செய்தாலாகிலும் விமோசனம் பிறக்கும் என நம்பிய பிளெபியன்கள், ரோமுக்கு ஆபத்து நீங்கிய பின்னும் தங்கள் நிலைமையில் மாற்றங் காணவில்லை.

சம உரிமைக்காக, பட்ரீஷியன்களுடைய ஏகபோக உரிமைகளைக் குறைப்பதற்காக, பிளெபியன்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். எவ்வளவுதான் அவர்கள் மன்றாடினும் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறுவதாகத் தெரியவில்லை. அதன்மேல் அவர்கள் கோபங்கொண்டு ரோம்நகரத்தையே விட்டுவிட்டு வெளியேறினர், தங்களுக்கென்று தனி நகரமொன்று ஏற்படுத்தப் போவதாக அவர்கள் பயமுறுத்தினர்.

குமுறல்

பிளெபியன்கள் இல்லாமல் ரோமில் பட்ரீஷியன்களால் நகரத்தைப் பரிபாலனம் செய்ய முடியவில்லை, அவர்கள் வலியச் சென்று பிளெபியன்களுக்கு வேண்டியதைச் செய்வதாகக் கூறிக் கூட்டிக் கொண்டு வந்தார்கள். வந்த பிறகும் ஏதோ சில உரிமைகள் கொடுக்கப்பட்டனவே தவிர முழு சமத்துவம் கிடைக்கவில்லை. சட்டங்களும், சட்ட நிர்வாகமும் இன்னும் பிரபுக்கள் கையிலேயே இருந்தன. அவர்களுடைய சர்வாதிகாரம் ஓரளவுக்கு குறைக்கப் பட்டதேயன்றி பிளெபியன்களை எல்லா காரியங்களிலும் தங்களுக்குச் சமானமானவர்களாக இன்னும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஏமாற்றமடைந்த பிளெபியன்கள் மற்றொரு முறை நகரத்தைவிட்டு வெளியேறினார். திரும்பவும் பட்ரீஷியன்கள் வருந்தியழைத்து பிளெபியன்களை ரோமுக்குக் கொண்டு வந்து சேர்த்தனர், அதற்குப்பின் தான் சமத்துவம் ஒப்புக்கொள்ளப்பட்டது. சட்டங்கள் தொகுக்கப்பட்டு எழுதப்பட்டன.

சமத்துவம் ஏட்டளவிலே ஏற்பட்டது உண்மை. ஆனால் நடைமுறையில் பணபலங்கொண்ட பட்ரீ-

ஷியன்கள்தான் ஆதிக்கம் செலுத்திவந்தனர். பொருளாதாரத் துறையில் முன்னேறினால் தான் பிளெபியன்களுக்கு கதி மோட்சம் பிறக்கும் என்பது தெளிவாயிற்று.

**சமத்துவம்**

எனவே பிளெபியன்களுடைய நிலைமையில் முன்னேற்றங்காண, அதற்காக தேவைப்படும் சட்டங்களை சீர்திருத்த, முயற்சிகள் நடந்தன. பிளெபியன்களுக்கு அரசியலில் சம உரிமை கொடுக்கப்பட்டபின் அவர்களே பட்ரீஷியன்களை எண்ணிக்கையில் அதிகமிருந்ததால், அவர்களுடைய தயவும், ஆதரவுமின்றி, பட்ரீஷியன்கள் பதவிக்கும், அதிகாரத்துக்கும் வரமுடியாது என்ற நிலை ஏற்பட்டது. அதனால் பட்ரீஷியன் தலைவர்களும் பிளெபியன்களுடைய ஆதரவைப் பெறுவதற்காக அவர்களுக்கு சாதகமான சட்டங்களை ஒவ்வொன்றாக நிறைவேற்றினார்கள்.

முடிவில் பிளெபியன்களுடைய ஆதிக்கத்தையே பட்ரீஷியன்கள் ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. அடக்கப்பட்டுக் கிடந்தவர்கள் அதிகாரம் வகிக்கத் தொடங்கினர். பிறப்பினால் பதவி கிடைக்கும் என்ற நிலைமை மாறியது.

**சாம்ராஜ்யம்**

இந்தக் குடும்பச்சண்டைமுடிந்து அமைதியும், ஒற்றுமையும் ஏற்பட்டதும், ரோம் நகரம் இத்தாலியில் சிறிது சிறிதாக தன்னுடைய ஆதிக்கத்தைப் பரப்பியது. ஒன்றுபட்ட ரோமின் பலம் பகைவர்களை மிரண்டோடச் செய்தது. ரோமரின் சிநேகத்தைக் சுற்றுப்புற ராஜ்யங்கள் சில நாடவேண்டியதாயிற்று. ரோமரின் பாதுகாப்புக் கிடைத்தால் போதும் என்று பலர் நினைத்தார்கள். ரோமுடன் தொடர்பிருந்தாலே பகைவருக்குப் பயப்படவேண்டியதில்லை என்ற நிலை ஏற்பட்டது இத்தாலியில்.

ரோமின் வளர்ச்சியைக் கண்டு பயந்தோ, பொறாமைப்பட்டோ அதை எதிர்த்த ராஜ்யங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டன. பகைவர்களால் வெளிநாட்டிலிருந்து உதவிக்கு வரவழைக்கப்பட்ட ராணுவங்கள் முறியடிக்கப்பட்டன. ரோமின் பெருமை இன்னும் அதிகரித்தது.

ஹனிபால் என்ற கார்த்தேஜ் ராஜ்யத்தின் ராணுவத் தளபதி, தனக்கு நிகர் யாருமில்லை என்று பறைசாற்றினவன் இத்தாலியைப் படையெடுத்து ரோம் நகரத்தையே நிர்மூலமாக்கத் திட்டமிட்டான். கடும் போருக்குப்பின், திறமை வாய்ந்த ரோமானியரின் சேனைகள் திறம்பட தயாரிக்கப்பட்ட ரோமானியரின் படைகள்—முடிவில் ஹனிபாலினுடைய தோல்வியே காணாத படைகளைத் தோற்கடித்தன.

இத்தாலி முழுவதும் ரோமின்கீழ் வந்தது. சிறு நகர ராஜ்யமாக ஆரம்பித்த ரோம் இப்பொழுது இத்தாலியின் தலைநகரமாயிற்று.

இதிலிருந்து ரோமின் ஆதிக்கம் வெளிநாடுகளுக்கும் பரவி ஒரு உலக சாம்ராஜ்யத்தை நிறுவ அதிக நாட்கள் பிடிக்கவில்லை. கி. பி. 2-ம் நூற்றாண்டில் மேற்கத்திய நாடுகள் அத்தனையும் ரோமானியரின் ஆட்சியின்கீழ் வந்தன. ரோமானியரின் ஆட்சி பரவிய இடமெல்லாம் அவர்களுடைய மொழியே அரசாங்க மொழியாக, அவர்களின் சட்டமே பொதுச் சட்டமாக ஏற்படுத்தப்பட்டது.

பெரிய சாம்ராஜ்யத்தின் தலைநகரமாக ரோம் நகரம் மாறினபின், இவ்வளவு பெரிய பொறுப்பை ரோம் மேற்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டபின், ரோமரின் அரசாங்க அமைப்பிலே மாற்றங் காணவேண்டியது அவசியமாயிற்று.

பட்ரீஷியன், பிளெபியன் தகராறுகள் தீர்ந்து எல்லோருக்கும் சமத்துவம் அளிக்கப்பட்டு மக்களாட்சி ஏற்பட்டபிறகுதான் ரோம் வளர்ச்சி அடைந்தது. சாம்ராஜ்யம் தோன்றியது.

**ராணுவ பலம்**

ஆனால் புதிய பொறும்பை ஏற்றுக்கொள்ளுவதற்கு மக்களாட்சி நடைமுறையில் பயனற்றதாயிற்று திறமைக்குறைவினால் — வேகமாக மாறிக்கொண்டிருக்கும் புதிய நிலைமைகளில் துரிதமாகவும் தகுதியாகவும் மக்கட் பிரதிநிதி சபைகள் செயலாற்றமுடியாத காரணத்தால். இந்த நிலைமையில் ஜூலியஸ் சீசர் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று வெற்றிபெற்று வாகைசூடி ரோமுக்கு, திரும்பிவந்து மக்களுடைய மதிப்பையும் ஆதரவையும் அன்பையும் பெற்ற ராணுவ வீரர்கள், அதிகாரத்துக்கு வந்ததும் ஜனநாயக அமைப்புகளை அவ்வளவாக மதிக்காமல் ராணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வாதிகாரத்தை நிலை நாட்டினார்கள்.

வெளி நாடுகளில் வெற்றி பெறுவதன் மூலம் ரோமின் கீர்த்தி வளர்ந்து புதிதாகப் பிடிக்கப்பட்ட ராஜ்யங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட கப்பம், வரி முதலியவைகளால் ரோமுக்கு நிறையச் செல்வம் சேர்ந்து அதனால் தங்களுக்கு செல்வாக்கும் சுபீட்சமும் கிடைத்தால் போதும் என்று எண்ணிய மக்கள் வர, வர ஆட்சியில் அதிகக் கவனம் செலுத்தாமல்—ஆட்சியில் தங்கள் பங்கும் பொறுப்பும் குறைவதைக் கண்டும் கவலை கொள்ளாமல் — ராணுவத் தலைவர்களின் சர்வாதிகாரம் வளருவதற்குத் துணை புரிந்தனர். ராணுவத் தலைவர்கள் சிறிது காலத்தில் தங்களை சக்கரவர்த்திகள் என்று பிரகடனப் படுத்திக்கொண்டனர்.

இந்த இலையில் இதுவரை போற்றப்பட்டு வந்த கிரேக்கர்களுடைய ஜனநாயக அரசியல் சுதந்திரக் கருத்துகள் மக்கள் மனதிலிருந்து சிறிது சிறிதாக மறையத் தொடங்கின. அரசியல் ஒற்றுமை, கட்டுப்பாடு அமைதி, குலக் குடிமை, எல்லோருக்கும் பொதுவான சட்டம் முதலான புதுக்கருத்துகள் தோன்ற ஆரம்பித்தன,

**அரசு பற்றி**

ஏபிக்யூரிகள் அரசு அல்லது ராஜ்ய அமைப்பை, அனுவசியமாகவும் தேவையின்றியும் மக்கட் காரியங்களில். தலையிடும் ஒன்றாக கருதினர். ஆனால் ரோமானியர் அரசு என்பது இயற்கையும் தேவையுமான ஒரு அமைப்பு என்று கருதினர். அரசு அமைப்புக்கு சில அதிகாரங்களும் அத்துடன் கடமைகளும் உண்டு. அதுபோல் தனி மனிதனுக்கும் உரிமைகளும் உண்டு. என்று ரோமானியர் எண்ணினார்கள். தனி மனிதனின் முக்கியத்துவத்தை அவர்கள் வற்புறுத்தினர். ஒரு மனிதனின் உரிமையை மற்றவர்கள் பறிக்காமலும், அரசாங்கமே பறித்துவிடாமலும் காப்பாற்றவே அரசு இருக்கிறது என்பது அவர்கள் கருத்து.

சட்டப்படி எல்லா அதிகாரமும் அரசு என்ற அமைப்பிலே இருப்பதாகத் தோன்றினாலும், உண்மை

யில் மக்கள் எல்லோரும் சேர்ந்த ஒரு கூட்டு அமைப்பிலேயே சக்கரவர்த்திகள்கூட மக்களால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள்தான் என்று நினைக்கவேண்டும். சட்டங்கள் சக்கரவர்த்திகளிடமிருந்து உதயமாவதற்குக் காரணம் மக்கள் தங்கள் அதிகாரம் முழுவதையும் தாங்கள் செலுத்துவதற்குப் பதிலாக சக்கரவர்த்திகளிடம் கொடுத்துவைத்திருக்கின்றனர். ஆனால் ஒரு தரம் கொடுத்த அதிகாரத்தை முறிக்கவோ, திரும்பப் பெற்றுக்கொள்ளவோ முடியாது. மக்களிடமிருந்து பெற்ற ஆணையை அதிகாரிகள் துர்விநியோகம் செய்தாலும் அதற்கு விமோசனம் கிடையாது. அதனால் அரசாங்கத்துக்கு விரோதமாக கிளர்ச்சி செய்யவோ, புரட்சியின்மூலம் அதை கவிழ்ப்பதோ கூடாது.

இவ்விதம் சக்கரவர்த்திகள் தங்கள் அதிகாரத்தை மக்களிடமிருந்தே பெறுகிறார்கள் என்ற எண்ணம் நாளடைவில் மறைந்து, எல்லா அதிகாரமும் கடவுளிடமிருந்து வந்தது என்ற எண்ணம் தோன்ற ஆரம்பித்தது பிற்காலங்களில். ஆனால் கிருஸ்துவமதம் ரோம் சாம்ராஜ்யத்தின் அரசாங்க மதமாக ஏற்பட்டபின், கடவுளிடமிருந்து பெறப்பெற்ற இந்த மகத்துவம் சக்கரவர்த்தியாயிருக்கும் தனிப்பட்ட ஒரு ஆளுக்கு அல்ல சக்கரவர்த்தி பதவி அல்லது ஸ்தானத்துக்கே உரியது என்ற புதிய எண்ணம்தோன்றியது.

ரோமானியர்கள் அரசியலையும் அறநிலையையும் வேறுபடுத்தினர். சமுதாயம் வேறு ராஜ்யம் அல்லது அரசு வேறு என்ற எண்ணத்திலிருந்து தனி மனிதரின் முக்கியத்துவத்தை வற்புறுத்தினார்கள். அதிலிருந்துதான் ரோமானி தனிநபர்ச் சட்டம் தோன்றிற்று.

உலகப் பொதுமையுணர்ச்சி (Cosmopolitanism) கருத்தை முதன் முதல் ரோமானியரிடத்தில்தான் காண்கிறோம்.

ரோமானியருடைய அரசியல் கருத்துக்கள் அவ்வளவாக பிரபல்யமடையாவிட்டாலும் அவர்களுடைய அரசாங்க அமைப்பு முறைகள், சட்டநிறுவனம் முதலியவைகள் மேனாட்டு அரசியலை மிகவும் பாதித்துள்ளன.

ரோமானியரின் சட்ட முறைகள் பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட

## ஏ! அப்பா!!

தண்டசக்கரம்
தருமசக்கரம்
காலசக்கரம்
விஷ்ணுசக்கரம்
ஐந்திராஸ்திரம்
சைவாஸ்திரம்
வச்சிராஸ்திரம்
சூலம்
பிரமசிரோஸ்திரம்
ஐஷீகாஸ்திரம்
பிரமாஸ்திரம்
மோதகி
சிகரி
தர்மபாசம்
காலபாசம்
வருணாஸ்திரம்
சுஷ்கம்
ஆர்த்திரம்
பைநாகாஸ்திரம்
நாராயணாஸ்திரம்
ஆக்னேயாஸ்திரம்
வாய்வாஸ்திரம்
அயசிரோஸ்திரம்
கிரௌஞ்சாஸ்திரம்
விஷ்ணுசக்தி
ருத்திரசக்தி
கங்காளம்
காபாலம்
கங்கணம்
வைத்தியதராஸ்திரம்
காந்தருவாஸ்திரம்
பிரஸ்வாபனாஸ்திரம்
சௌராஸ்திரம்
தர்ப்பணம்
கோஷணம்
சந்தர்ப்பணம்
விலாபனம்
மதனம்
மோகனாஸ்திரம்
தமசம்
சௌமனம்
சம்வர்த்தம்
மௌசலம்
சத்தியாஸ்திரம்
மாயாதராஸ்திரம்
தேஜப்பிரபாஸ்திரம்
சௌம்யாஸ்திரம்
துவஷ்டாஸ்திரம்
ஸிதேஷ-மானவாஸ்திரம்
சத்யவந்தம்
சத்யகீர்த்தி
திரஷ்டம்
ரபசம்
பிரதிகாரதரம்
பிராமுகம்
அவாங்முகம்

வட்சாக்ஷம்
விஷமம்
திருடநாபம்
சுநாபகம்
சோதிஷம்
கிருசனம்
நைராசியம்
விமலம்
யோகந்தரம்
அரித்திரம்
சார்ச்சி
சர்மாலி
திருதீர்மாலி
விரத்திமான்
ருசிகரம்
பிதுருசௌமனசம்
விதூனம்
மகரம்
கரவிகீரம்
தனம்
தான்யம்
காமரூபம்
காமருசி
மோகம்
ஆபரணம்
ஜிரும்பகம்
சர்வநாபம்
சந்தானம்
வாணம்

இவைகள் என்ன என்கிறீர்களா? அஸ்திரங்களய்யா, அஸ்திரங்கள்!!

ஆரியப் புராணங்கள் நம்பும்படி சொல்கின்றன!

இவ்வளவு அஸ்திரங்கள் உண்டாம், ஆரியக்கடவுளரிடம்!

இக்கடவுளர், இந்த அற்புதமான ஆயுதங்களைத், தம்மைப் பூஜித்து அருள்பெறுபவர்களுக்கு அருளுவராம்!

இவ்வளவும், ஆரிய மார்க்கத்தைத் தழுவிடும் அரசர்களுக்கும் கிடைக்கும் என்றான் புராணீகன்!

நம்பினோர்! ஆனால், 'பாரத் வர்ஷ'த்தின் மீது அன்னியர் படை எடுத்த எந்தச்சந்தர்ப்பத்திலும், இந்த அஸ்திரங்கள் பயன் பட்டதாகக் கதையும் இல்லை!

இவ்வளவு அருளாயுதங்கள் பெற்றிருந்தும் ஏன் நாடு அன்னியருக்கு அடிமைப்பட்டது என்று கேட்டாலோ, இந்த அஸ்திரங்கள் ஏன் பலிக்கவில்லை என்று கேட்டாலோ, சபிக்க வருகிறார்கள், சத்புருஷர்கள்!!

அனுபவத்தின் விளைவு. ரோம சாம்ராஜ்யத்தின் பெருமைக்கு அது ஒரு சான்று, அது எவ்வளவு தூரம் உலக சட்ட முறைகளை உண்டாக்குவதற்குக் காரணமாயிருந்தது என்று யாராலும் கணக்கிட முடியாது. அநேகமாக இன்று உலகின் பல்வேறு பாகங்களிலும் காணப்படும் சட்ட முறைகள் அத்தனையுமே ரோமானியரின் முறையைப் பின் பற்றியதே என்று சொன்னாலும் அதில் தவறில்லை. எல்லா சட்டங்களும் மக்களின் சம்மதத்திலிருந்தே கிளம்புகின்றன என்ற கருத்தும், ரோமானியாருடையதே!

உலக சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆளுவதற்கு ரோமானியர் பல உபாயங்களை கையாண்டனர். ராஜ்யத்தின் பல பகுதிகளையும் இணைக்கவும் சேனைகளை வேகமாகவும் சுலபமாகவும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக் கொண்டு போவதற்காகவும் சாலைகள் போடப்பட்டன. ஆங்காங்கே நிறுத்தி வைக்கப் பெற்றிருந்த ரோமானியச் சேனைகள் கலகங்கள் நிகழாதவாறு பார்த்துக்கொண்டனர். எங்கும் அமைதி நிலவியது. இதனால் வியாபாரம் செழித்தது, அமைதியை நிலைநாட்டும் நோக்கத்துடன் தனிமனிதனின் சுதந்தரம் கட்டுப் படுத்தப் பட்டது, கிரேக்கர்கள் சுதந்தரத்தை எவ்வளவு போற்றி அதையே வற்புறுத்தினார்களோ, அந்தளவுக்கு ரோமானியர் அமைதி, கட்டுப்பாடு என்ற கொள்கைகளை வற்புறுத்தினார்கள்,

உலகின் பெரும்பாகத்தை தங்களுக்கடியில் கொண்டு வந்து ஒரே அரசியல் அமைப்பை ரோமானியர் ஏற்படுத்தினதன் விளைவாக ஒரே வித சட்ட முறையும் காணப்பட்டது. இதன் காரணமாக ஒரு பொதுமை உணர்ச்சி, வளரவும் பலதிறப்பட்ட மக்களிடையே ஒற்றுமை ஏற்படுவதற்கும் ஏதுவாயிருந்தது.

ரோம சாம்ராஜ்யம் எவ்வளவு பரந்திருந்ததென்றாலும் எல்லா அதிகாரங்களும் ஓரிடத்தேகுவிந்த சர்வாதிகார ஆட்சி தான் நடைமுறையில் ஏற்றதாகக் கருதப் பட்டதும் ஜனநாயக அரசியல் கருத்துக்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. (தொடரும்)

# "மலேயா" மலர!

ஏறத்தாழ 50-ஆண்டுகட்கு முந்திய மலாயாவைக் கற்பனை செய்து பார்ப்பதுகூடக் கஷ்டம்தான். அன்றைய நிலைமையை அறிந்தவர்கள் தாம் இன்றைய மலாயாவைக் கண்டு வியக்கமுடியும். அந்தக் காலத்தில்—அதாவது இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மலாயாவில் கண் திரும்பிய இடமெல்லாம் காடுதான். அதுமட்டுமன்று. எங்கு பார்த்தாலும் மலேரியாக் கொசுத்திரள். இந்நிலையில் மனிதர் வாழ முடியுமா என்ன? மலேரியாக் கொசு மண்டிக் காடாகக்கிடந்த ஒரு நிலப் பரப்பை மக்களினம் வாழத்தக்க, மலாயாவின் உயிர்நாடியான ரப்பர் மரம் செழித்தோங்கத்தக்க — வளநாடாக்கிய பண்பாளர்—தியாகச் செம்மல்கள் — யார்? தமிழர்களேயல்லரோ? அவர் தம் மரபு வழி வழிச் சிறக்க என்று மலாயாவிலுள்ள மண்ணும் கல்லும் மாவும் புள்ளும் மரமுமெல்லாம் — தமக்கு வாய் இருந்தால்—வாயார வாழ்த்துமென்பதில் ஐயமேது? இன்று நாம் காண்கின்ற இந்த மலாயா தமிழர் தம் தியாகச் சின்னமன்றோ! தங்கு தடையின்றி வண்டிகள் ஓடச் சாலைகளும் ரயில் பாதைகளும் அமைக்கத் தமிழர்கள் பட்டபாட்டினை அன்று கவிதை நெஞ்சம் படைத்த ஒருவன் பார்த்திருப்பானாகில் அவன் தன்னையறியாமலே பெருங்காப்பியம் ஒன்று இயற்றியிருப்பான் அல்லனோ? இத்தனையும் செய்த தமிழரை மலாயா இன்று எந்நிலையில் வைத்திருக்கிறது? தமிழர் செய்த தியாகத்திற்குத் தக்க கைம்மாறு அளிக்க முடியாதெனினும் நாட்டு வளம் அவர்களின் வாழ்க்கையிலும் குலுங்கும்படி செய்வது இந்நாட்டு அரசினருக்கும் முதலாளிமாருக்கும் இயல்வதுதானே? அரசினரும் தோட்ட முதலாளிமாரும் தமிழர் தம் வினையாண்மையையும் எந்நாடும் நலம்பெற உழைக்கும் பரந்த சிந்தையையும் நன்கறிவர். அந்த நன்றியுணர்வு செயலாக மலரும் காலம் வந்துவிட்டது. தமிழரின் அந்நாளைய அருஞ்செயலைப் பாராட்டும் கவிதையொன்று அண்மையில் மலாயா தோட்ட முதலாளிமார் ஐக்கிய சங்கப் பத்திரிகையான 'பிளாண்டர்' என்ற பத்திரிகையில் வெளியாயிற்று. அதனை இங்கு மொழி பெயர்த்துத் தருகிறோம்.

"இந்த நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் மலாயாவில் இருந்த ரப்பர் எஸ்டேட்டு முதலாளிகளுக்குத் தொழிலாளர்கள் மிக அவசரமாகத் தேவைப்பட்டனர். எந்த இடத்திலிருந்தாவது அவர்களை வருவித்துவிட வேண்டுமென்ற துடிதுடிப்பு அதிகமாயிருந்தது.

அதிர்ஷ்டவசமாகச் சொற்ப தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வந்திருந்தனர்.

அந்தக்காலத்தில் தொழிலாளர் திரட்டும் வேலை இவ்வாறு தான் ஆரம்பமாயிற்று. இது நடந்து கொண்டேயிருந்தது.

இந்தியாவிலிருந்தும்யாழ்ப்பாணத்திலிருந்தும் தமிழர்கள் வந்தனர்.

அவர்கள் தாம், ரப்பர் எஸ்டேட்டுகளை உருவாக்குவதற்காகக் காடு வெட்டிப் பண்படுத்திய தொழிலாளர்களின் உயிர் நாடியாக விளங்கினர்.

ஆனால் அவர்களில் நூற்றுக்கு முப்பதுபேரை மலேரியா வாரிச் சென்று விட்டது.

அந்தக் காலத்தில் மலேரியா மிக அதிகமாய்ப்பரவியிருந்தது. அதை ஒழிப்பதற்கான வழிவகைகளை வகுக்க முற்பட்ட எஸ்டேட்டுமானேஜர்களும் டாக்டர்களும் கழிகால்கள் வெட்டித் தண்ணீரில் மருந்து தெளித்து மலேரியாக் கொசுக்களை ஒழிப்பதற்கு, கித்தா மரங்களிடையே வசித்துவந்த தமிழர்களின் உதவியைத்தான் பெரிதும் நாடினர்.

காடு கெடுத்து நாடாக்கும் வேலை முன்னேற முன்னேறக் கடலோரத்திலிருந்து உள்நாட்டுப் பகுதிகளுக்குச் செல்லச் சாலைகளும் ரயில் பாதைகளும் அமைப்பதுதான் அவசர வேலையாயிருந்தது.

அரசாங்க மராமத்திலாகா இந்த வேலைகளை முன்னின்று நடத்தியது.

தமிழர்கள் இப்போது அரசாங்கத்தில் தங்களுக்கு நியாயமாய் உரிய பங்கைப் பெறவே காத்திருக்கின்றனர்.

இத்தனையும்செய்துள்ள தமிழர்கள் கைவிடப்படமாட்டார்கள் என்றே நாம் நம்புகிறோம்."

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press.
95. Tirukkachinambi St, Kancheepuram.